TUN 409

# நவீன சினிமா நிலையம்

பரமன்



T. R. ரஜனி

15-11-47

விசேஷமலர்

விலை 4 அணா

உ

தேவி மீனாம்பிகை துணை.

நாடகக் கலையரசு

நாடகக் கலாநிதி

நாடகக் கேசரி

சுதந்திர நாடகமணி

நவாப் T. S. ராஜமாணிக்கத்தின்

# மதுரை

# தேவி பால விநோத சங்கீத சபையார்

# மதுரை

## செல்லம் தியேட்டரில்


**8—11—47** சனிக்கிழமை முதல் பிரதி தினமும்

★ ★ ★ தமது

பிரசித்தி பெற்ற **ஞான சௌந்தரி** நாடகத்தை

★ ★ ★

நடத்துவார்கள்.



நவாப் T. S. ராஜமாணிக்கம்

திங்கள் தோறும் விடுமுறை

டிக்கட் வரியுள்பட ரூ. 5. ரூ. 4. 2-12-0.

ரூ. 1-8-0 0-12-0.

நவாப் T. S. ராஜமாணிக்கம்,

புரோப்ரைட்டர்.



# திரையிடத் தயார்!




## உங்கள் மனதை விட்டகலா ஓர் சிறந்த தமிழ் படம்

V. குமார்
P. G. வெங்கடேசன்
T. V. சேதுராமன்
ராமுடு ஐயர்

ராஜேஸ்வரி
குமாரி வனஜா
அங்கமுத்து
P. R. மங்களம்

—: மற்றும் பலர் :—

டைரக்ஷன்:
**ஜவேரி, குமாரஸ்வாமி.**

பாட்டு:
**கல்யாண ரமணி.**

ஸ்டுடியோ:
**நெப்ட்யூன்.**

கதை, வசனம்
**V. குமாரஸ்வாமி.**

——: விவரங்களுக்கு :——

## குஹன் பிக்சர்ஸ் லிமிடெட்,

**40, குக்ஸ் ரோடு :: சென்னை-12.**

சுதந்திர ஒளியில் பிரகாசிக்கும்

# ஆபரண மாளிகை

காரைக்குடி.

★

# A.T.A.N. & Co.

★

உங்களுக்குத் தேவையான

வைரம், தங்கம்

வெள்ளி நகைகள்

வாங்க நம்பிக்கைக்கும்

நாணயத்துக்கும் சிறந்த இடம்.

போன் நெ. 15.

தந்தி: "ட்ரூத்"

**A. தங்கச்சாமி செட்டி நடராஜன் செட்டி & Co.,**

நகை வியாபாரிகள், :: காரைக்குடி.

நவீன

# சினிமா நிலையம்

## விசேஷ மலர்

ஸ்தாபிதம் 1942

ஆசிரியர் : வி. பிச்சையன்   துணை : பரமன்

சென்னை, நவம்பர் 15ௗ 1947



நடனராணி ரமணி

## சமர்ப்பிக்கின்றோம்!

### சுதந்திர தீபாவளி!

'அன்பு செழிக்க அகிலமெலாம்
இன்பந் துய்க்க வருக ஞான்று!'

மக்கள் உய்ப, வையகம் புத்தொளியுடன் பிரகாசிக்க, வரூமைத் துயர் என்னும் இருள் விலக, இன்ப ஜோதி ஒளிப்பெற, தோன்றியதூ தீபாவளி!

அறிவில் சிறந்த மானிட மக்கள் பகுத்தறிவைப் பாழாக்கி அகர்தை, ஆணவம், இழுக்கு, நய்மை (மடமை) போன்ற தீய குணங்களைக் கைக்கொண்டு இதுநாள்வரை சமூகத்து நச்சுக்களென நசிந்தவர்கள் ஒழிந்தனரென கொண்டாடும் நாளாகும் தீபாவளி!

அன்னியர் ஆட்சி ஒழிந்து, நம்நாடு—குமரி முதல் இமயம்வரை பரந்த பாரத நாடு-சுதந்திரம் பெற்று, இதந்தரும் நல்லறிவியலில் மகிழ்வு துலங்க, புத்தாடை அணிந்து, சாந்தி பெறும் வகையில் தீப ஒளியில் இறைவனை வேண்டுதலே தீபாவளி!

தமிழகம் தழைக்க தரணி யுள்ளளவும் மக்கள் மனங்குளிர கொண்டாடிக்குதூகளிக்கும் புனித நாள் தீபாவளி!

இந்நன்னாளில் கலைச்சுடரேற்றி, கலாதேவி கழல் இணைக்கு, கலை ஆர்வம் கொண்ட கலைஞர்களின் பொன் மலரென, இணையிலா இம்மலரை சமர்ப்பிக்கின்றோம்.

'கலா தேவி' எம் மக்கள் இனிது வாழ என்றென்றும் அருள் செய்' என்று வேண்டி வணங்குகின்றோம்.

இந்தப் புனித தீபாவளி நன்னாளில் எமது இணையற்ற வாசகர்கள் கரங்களில் இம்மலர் மணம் வீசுவது மகிழ்ச்சிதான்!

இம்மலரில் இடம் பெற வந்த கட்டுரைகள் பல. முக்கியமாக எதிர்ப்பார்த்த பலவும் தாமதமாக வந்ததால் இடம் பெறச் செய்ய முடிய வில்லை. இதற்கென்றே இம்மலரையும் நான்கு நாள் தாமதம் செய்ய துணிந்தது.

முயற்சி வெற்றி பெற்றது! உள்ளம் களி கொண்டது. அறிஞர்கள், கலைஞர்கள், மற்றும் பல அன்பர்கள் அனைவரது கட்டுரைகளும் பின் வரும் இதழ்களில் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நம்முயற்சியில் பங்கு கொண்டு ஒத்துழைத்த அன்பர்களுக்கும், விளம்பரம் கொடுத்துதவிய அபிமானிகளுக்கும், நம் நன்றி. விஷயதானங்கள் அனுப்பியுள்ள கட்டுரை, கதாசிரியர்களுக்கும், நமது நிலைய ஏஜண்டுகளுக்கும், மற்றும் உள்ளன்பு கொண்ட நண்பர்கள், வாசகர்கள் அனைவருக்கும் குதூகலமான சுதந்திர தீபாவளி வாழ்த்துக்களை மனமகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றோம். வணக்கம்.

# நாடகம்

[கவி A. M. நடராஜ முதலியார்]

சென்ற இதழ் தொடர்ச்சி

அப்பொழுது கம்பெனியில் மிருதங்கக்காரரா யிருந்து வந்த தி. சுப்பராய முதலியார் கொல்லாபுர சமஸ்தானத்தில் ஆஸ்தான வித்வானாக இருந்து வந்தார் எப்போதும் கலையில் ஆர்வமும் தன் சொந்த குடும்பத்தில் பற்றில்லாதவராகவே இருந்து வந்தார். இவர்தான் ஆலந்தூர் ஒரிஜினல் இந்து டிராமாடிக் கம்பெனியின் தலைவர். C. வெங்கடாசல முதலியார் அவர்களது ஒன்று விட்ட தமயனார் என்பதும் முன்னமேயே கூறி யிருக்கிறோம். இவருடைய தெலுங்கு கீர்த்தனங்களும், பத்தியங்களும் வெகு அழகாக இருக்கும் தமிழ்போல் ஆந்திரமும் கற்றவர். இனிமையான பெண்களின குரல் வாய்ந்தவர் நல்ல நடிகரும் கூட ஆவர். சில சமயங்களில் கருந் தமிழாகப் பேசக் கூடியவர். நல்ல குணம் வாய்ந்தவரெனினும் பெரும் கோபி. சில சமயங்களில் துர்வாசர் போலவே காணப்படுவார். பெரிய பெரிய நடிகர்களே அவரைச் சந்திக்கும்போது ஏதாவது கேட்க வேண்டுமானால் பாம்பு போல் நெளிந்து நெளிந்து போய் மெல்ல வினவுவார்கள். அவர் உட்காரச் சொன்னால் தான் உட்கார வேண்டும். சகஜமாகப் பழகுவது மிகவும் துர்லபம். நல்ல திடகாத்திர முடையவர். யோக நிலையிலும் பழகியவர். பார்த்தது பார்த்தபடியே, சில நேரம் பேசாமலும் இருப்பார். ஆசு, மதுரம், வித்தாரம், சித்திரம் என்பதில் நானகும் கைவரப் பெற்றவரெனினும், சித்திரத்தில் வெற்றி கண்டவர். அதனாலேயே அவரை அனைவரும் சித்திரக்கவி என்றழைப்பார்கள். சாதாரணமாய்ப் பேசும் போதும் சொற்களெல்லாம் எதுகை மோனையோடுதானிருக்கும். பெண்கள் விஷயத்திலும், ஓர் அளவுக்கு மேற்பட்ட தொடர்பு வாய்ந்தவர் தான். இவர் சுரக்ஞானியுமாதலால் வர்ண மெட்டுகளையும் செய்து அதில் கவியும் செய்யும் இயல்புடையவர். கவிராயர்களில் பாடும் சக்தியும் சுரக்ஞானமும் இருந்த உண்மைக் கவிகளில் இவரே பாடும் ஆற்றலுடையவர், பரத சாஸ்த்ர நிபுணத்வம் வாய்ந்தவரென்று முன்னமேயே கூறி யிருக்கிறோம். இவரைப் பற்றிய பல வேடிக்கை கதைகள் உண்டெனினும், இவரது கோபத்தைக் குறித்து சேலத்து கதை யொன்று சொல்லுகிறேன். அந்தக் காலத்தில் சேலத்துக் கோட்டகையில் 'லங்காதகனம்' ஆலந்தூர்கம்பெனியாரால் நடத்தப் பட்டது. அப்போது அதில் ஆஞ்சநேயராக நமது சித்திரக்கவி நடித்தார். இவர்பெயரிட்டு நடக்கும் நாடகத்திற்கு நல்ல வரும்படி வருவது வழக்கம். எப்போதாவது சில சமயங்களில் பொது ஜனங்கள்தொந்தரை செய்தால் அவர்களைத் திருப்தி செய்யும் பொருட்டு இவர் பல வேடங்கள் தரிப்பதுண்டு. நாடகம் வெகு திருப்தியாக நடந்தது. கடைசி படுதா விடப்பட்டு நாடகமும் முடிந்து வேடிக்கை பார்க்க வந்த ஜனங்களெல்லாம் வீட்டுக்குத் திரும்ப யத்தனிக்கும் சமயம். வேடங் கலைக்கும் இடத்திற்குப் போன நமது கவிராயரவர்கள் முகம் துடைப்பதற்குவழக்கம் போல் எண்ணையும் வஸ்திரமும் கேட்க நல்ல

---

இளம் டைரக்டர்



வி. குமார்

சமீபத்தில் வெளிவரக் காத்துக் கொண்டிருக்கும் 'ஜம்பத்தை' கலைநுணுக்கத்தின் வெற்றிகரமாய் டைரக்ட் செய்தவர். இவர் ஒரு நடிகர், உணர்ச்சி ததும்ப, உற்ற எழுச்சியுடன் நடிக்கும் சாமர்த்தியம் உண்டு என்பதை ஜம்பம், விசித்திர வனிதா, மதனமாலா, ரத்னகுமார் முதலிய படங்களின் மூலம் தெரிய வருகிறது. வளரட்டும் இவரது கலாஞானம். அடையட்டும் பெரும் புகழும்.

# உடுக்கையின் பதில்

[லில்லி]

**G. S வாசன், திருவல்லிக்கேணி**

உடுக்கையாரே! திரு. M. K தியாகராஜ பாகவதர் தற்சமயம் எந்தப்படத்தில் நடித்து வருகிறார்?

பாகவதர் 'ராஜ முக்தி' என்ற படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். படம் பூனா பிரபாத் ஸ்டுடியோவில் மும்முரமாகத் தயாராகி வருகிறது. படத்தின் முழு உரிமையாளர் பாகவதரே தான்!

**ராஜன், தவுல்தாபாத்**

தண்டபாணி தேசிகர் இப்பொழுது எந்தப் படத்திலாவது நடித்துக் கொண்டிருக்கிறாரா?

ஆமாம் ராஜா! 'சிவயோகி'யிலும் 'திருமழிசை ஆழ்வா'ரிலும் மற்று மிரண்டு படங்களிலும் நடித்துக் கொண்டிருக்கிறார்!

**K. கிருஷ்ணன், புதுவை**

லக்ஷ்மி விஜயம் என்ற படத்தில் நடிக்கும் கதாநாயகி மாதுரிதேவியின் சொந்த பெயர் என்ன? முன்பு ஏதாவது படத்தில் நடித்திருக்கின்றாரா? அவர் பாடுவது சொந்தமா? இரவலா?

மாதுரி தேவியின் உண்மைப் பெயர், 'ஓளாரா' என்பது. சினிமா உலகில் நுழைந்ததும் 'சக்திரா' வென்று பெயரை மாற்றிக் கொண்டாள். இப்பொழுது 'மாதுரிதேவி' யாகியுள்ளார். 'வாயாடி' 'என் மனைவி' முதலிய படங்களில் நடித்துள்ளார். பாடுவது இரவல் குரலில் தான்.

**சொ. கபீர்தாஸ், ராயப்பேட்டை**

கொல்லபாமா புகழ் 'கிருஷ்ணவேணியும்' ஈ நாராமையாவும் தம்பதிகளா?

படத்திற்காக மட்டும் தான் அப்படி, உண்மையில் இல்லை.

**வாசன், திருவல்லிக்கேணி.**

காஞ்சனமாலா ஏன் இப்பொழுது படங்களில் நடிப்பதில்லை?

'ஆட ஜன்மம் என்ற தெலுங்கு படத்தில் தோன்றுவதாகத் தெரிகிறது.

**அஸ்வத்தன், கிருஷ்ணகிரி**

T. R. மகாலிங்கம் தற்சமயம் எந்தப்படத்தில் நடித்து வருகிறார்?

'வேதாள உலகம்' 'பவழக்கொடி' 'நாம் மூவர்' முதலிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

**E. N. K. தண்டபாணி, புதுவை**

சுதந்திர தினத்தன்று D. K. பட்டம்மாள் பாடிய தாயின் மணிக் கொடி பாரீர் என்ற பாட்டின் போது காட்சி யளிக்கும் 'காளி' ரூபத்தில் நடிக்கும் பெண்ணின் பெயர் தெரிவிப்பீர்களா?

அட தண்டமே! இருந்திருந்து அந்தக் காளிகா தேவிதானா உமக்குப்பிடித்தது, அந்த பெண்ணின் பெயர் தெரியாது. அவசியம் தெரிய வேண்டுமானால் மூன்றணா ஸ்டாம்பு அனுப்பவும்,

**விஸ்வநாதன், கிருஷ்ணகிரி**

P. A. பெரிய நாயகிக்கு கலியாண மாகி விட்டதா? நான் செய்து கொள்ள நினைக்கிறேன். விலாசம் என்ன?

அடேயப்பா! பெரிய ஆள் ஐயா நீர். பெரிய நாயகியை கலியாணம் செயது கொள்ள என்ன ஆர்வம் உமக்கு, விவாகமில்லை என்று தெரிகிறது. விலாசம் P. A. பெரிய நாயகி, சினிமா நடிகை, துங்கம்பாக்கம், சென்னை. எழுதி கேளும்.

---

எண்ணை புட்டி மணலில் சாய்க்கப் பட்டு எல்லாம் போய் விட்ட தென்று ஆசிரியரிடத்தில் எப்படி சொல்லுவ தென்று பயந்த நடிகர்கள் "எண்ணை கொட்டிப் போய் விட்டது சார்" என்று சொன்ன உடனே, விஸ்வரூபம் எடுத்தடங்கின ஆஞ்சநேயசாமிகளுக்கு பழைய விஸ்வரூபம் வந்து விட்டது; காலமோ அகலம் கடைகளும் கிடையாது. அதிலும் நீலப் பவுடர். வேறொன்றும் சொலலவில்லை. அப்படியே ஆஞசநேய ரூபத்துடன் வேகமாய் எழுந்து கும்பலாய்ப் போகும் ஜனங்களுடன் கலந்து செல்ல ஆரம்பித்தார். வேடிக்கைப் பார்த்த ஜனங்கள் அவர் பால் மிக்க அபிமான முடையவர்கள் ஆதலால் அதிக சத்தமிட்டு சிரிக்காமல் மர்மமாகவே பேசியும் நகைத்தும் கூடவே தொடர்ந்து சென்றார்கள். ஆனால் இப்படி வெளி வருவதற்குக் காரணம் என்ன என்பதை மட்டும் அறியாமல் திகைத்தார்கள். அநுமான் ஓரே கோபமாய் கம்பெனி வீடு போய், பிறகு செய்வன செய்து, பலர் இதஞ் சொல்ல எண்ணையிட்டு முகத்தையும் துடைத்து, உடைகளையும் களைந்து, மனம் சமாதானங் கொண்டார்.

தந்தி: 'ஓரிஜினல்' திருச்சி.

# M. ராமசாமி செட்டி & கோ.,

ஷராப் வியாபாரம், பெரியகடை வீதி,

திருச்சிறுப்பள்ளி.

: திருச்சி தொழிற்சாலைகள் :

1. இப்ராஹீம் பார்க் ரோட்
2. மதுரை ரோட்
3. திருவானைக்காவல் தெற்கு ரத வீதி
4. டாக்கர் சத்திரம்

எங்களிடம் கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு தயார் செய்த கல்ச்சர் வைரங்களில் தயாரான பலவித லோலாக் தினுசுகள் மூக்குத்தி, பேசரி, தோடு, கடுக்கன் முதலிய நகைகள் கியாரண்டியுடன் கிடைக்கும்.

*　　*　　*

## M. RAMASWAMY CHETTY & CO.

UP-TO-DATE MODERN JEWELLERY MANUFACTURERS

BIG BAZAAR STREET,　　TRICHINOPOLY.

# கலைக்கு ஆபத்து!

[கலைதாஸன் சுப்ரமண்யம்]

தமாஷா வரி உயர்வை கண்டிக்கும் தோரணையில், நாடகம், சினிமா இவை நாட்டின் பழம் பெரும் கலை ஒன்றை வளர்த்தி வருவதாக, நாடகக்காரர்களும், சினிமாக்காரர்களும் எழுதியும் பேசியும், தீர்மானங்கள் நிறைவேற்றியும் வருகிறார்கள்.

தமாஷா வரி உயர்வு கலைக்கும் கலாசேவைக்கும் ஏற்பட்டிருக்கும் புதிய ஆபத்து என்றும் கலையுலகக்காரர்கள் கூறுகிறார்கள்.

தமாஷா வரி உயர்வு பொது மக்களுக்கும் சரி, கலைஞர்களுக்கும் சரி, கெடுதியை விளைவிக்கிறது என்று கூறுகிறார்கள்.

தமாஷா வரி உயர்வைக் கண்டிப்பதில் நடிக கலையுலகில் பெரும் ஒற்றுமையை நாம் காண்கிறோம்.

தமாஷா வரி உயர்வால் விளைந்த ஆபத்து புதிது. ஆனால் தமிழ் நாட்டு நடிக கலைக்கு பல பழைய ஆபத்துக்கள் இருந்து தான் வருகின்றன. பழைய ஆபத்துகளை நீக்க முற்படாமல் புதிதாக எதிர் நோக்கும் ஒரு ஆபத்தை சமாளிக்க கலையுலகக்காரர்கள் இன்று ஒன்று கூடியுள்ளார்கள்.

ஒன்று கூடல், அதாவது இன்று கலையுலகில் ஏற்பட்டுள்ள இந்த மகத்தான ஐக்கியத்தை நாம் வரவேற்கிறோம். வரவேற்கத்தான் வேண்டும்.

வரவேற்று, இன்று ஏற்பட்டுள்ள ஐக்பத்துக்கு சில யோசனைகள் கூறுவோம். சினிமா, நாடக கலையுலகில் உள்ளவர்கள், கலைக்காக உழைப்பதாக கூறுபவர்களை, சில அத்தியாவசியமான முயற்சிகளில் ஈடு படும்படி வற்புறுத்துவோம்.

அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் தமிழ் நாட்டிலிருந்து சிலர் பறந்து போய் விட்டு திரும்பி வந்திருக்கிறார்கள். மேல் நாட்டிலுள்ள சாதனங்கள், அங்குள்ள நடைமுறைகளை இவர்கள் நன்கு ஆராய்ந்து பார்த்திருக்கவேண்டும்.

மேல்நாட்டுக்கலைக்கும், நமது நாட்டு கலைக்கும் பலவித வித்தியாசங்கள் இருக்கின்றன. நாகரிகத்திலும், கலாசாரத்திலும், மேல்நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் அடிப்படை வேற்றுமைகள் பல உண்டு.


மேல் நாட்டு நாகரிகம் தான் சிறந்தது என்ற அபிப்ராயம் மக்களிடை இன்று வெகு தீவிரமாக பரவி வருகிறது. நமது நாட்டு பண்டைய முறைகள் மேல் நாட்டு முறைகளுக்கு எவ்வகையிலும் குறைந்த தல்ல.மட்டமானவைகளுமல்ல.

சினிமா மூலமும் நாடகமூலமும் மக்கள் மனத்தில் மேல் நாட்டு நாகரிகத்தை பரப்ப முயற்சிக்கக் கூடாது. மேல் நாடுகளுக்கு சென்று திரும்பியுள்ள அறிஞர்கள், அங்கே காணப்படும்சுறு சுறுப்பையும், நம்பிக்கையையும், ஆர்வத்தையும் தான், நமது நாட்டு கலாசார புனருத்தாரணத்தில் காட்ட வேண்டும்.

கலையை தொழிலாகவே கருதாது, கடமையாக கருதும் பழக்கம் இங்கு ஏற்படவேண்டும். கடமையை உணர்ந்து காரியங்களில் ஈடுபடுவதாலேயே, மேல் நாட்டார்கள் உலகில் எங்கும் தங்கள் செல்வாக்கை ஸ்தாபித்துக் கொள்ளமுடிகிறது.

---

காரைக்குடி ஸ்ரீமதி A. T. ராஜலக்ஷ்மி



சங்கீத வித்வான் சீர்காழி ஸ்ரீ சதாசிவம் பிள்ளையின் சிஷ்யையான இவர் நன்றாக பாடுவதோடு பரத நாட்டியத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றுள்ளார் ரஸிக உலகத்தின் அபிமானத்தையும் ஆதரவையும் இந்த இளம் கலாமணி எதிர் பார்த்திருக்கிறார்.

ஏற்கெனவே மிருந்துள்ள ஆபத்துகளில், தமிழ் சினிமாவை பொறுத்தவரை, "ஸ்தன பார" விளம்பரமும் பெரும் ஆபத்தாக தோன்றுகிறது. சினிமாக் கதைகளில் காதல் கட்டங்களுக்கே தமிழ் நாட்டில் பிரதானம் கொடுக்கப் படுகிறது, காதல் கட்டத்திலும், கதாநாயகியின் பருத்த "ஸ்தனபார"த்துக்கே "குளோஸ் அப்" கொடுக்கப்படுகிறது. இந்த மட்டரகமான விளம்பரம், உண்மையில், கலா மண்டலத்தை, காமலீலா மண்டலமாகவே மாற்றி வருகிறது.

ஒழுக்கம், அன்பு, மரியாதை, கௌரவம் இவற்றை சமுதாயத்தில் வளர்ப்பதற்கும், சோர்ந்து போயுள்ள மக்களின் உள்ளங்களில் களிப்பையும், களிக்கும் நேரத்தில் அவசிய மான சில படிப்பினை களையும் போதிப்பற்கே கலை உலகம் முயல வேண்டும்.

சட்டசபையில் ஸ்தானம் வேண்டுமென்று நடிகர்கள் சங்கம் முன்பு ஒரு முறை கோரியிருந்ததாக ஞாபகம்வருகிறது. சட்டசபையில் ஸ்தானம் கோருவது பிசகு என்று நான் சொல்லவில்லை. ஆனாலும் இத்தகைய வீண் கௌரவங்களுக்கு கலா மண்டலம் ஏன் முனைய வேண்டும் என்பது தான் புரியவில்லை

கலைக்கு ஆபத்து என்றால் தமாஷாவரிஉயர் வால் என்று சொல்ல முடியாது. கலையுலகம் உண்மையாகவே கலாமண்டலமாகதிகழஆரம் பித்தால் சர்க்காரே தமாஷாவரியை விலக்கி விடும். நடிக கலையுலகம் இனி உண்மைக்கு பாடுபடட்டும்! ஏற்கெனவே உள்ள ஆபத்து களை அதாவது முறைகளை நிவர்த்திக்கட்டும்.

இதற்காக தமாஷாவரி உயர்வை நான் வர வேற்பதாக நினைக்க வேண்டாம்.

கலைஞனையும் ரஸிகனையும் ஒருங்கே பாதிக் கும் வரி உயர்வை மட்டும் நான் எதிர்க்க வில்லை—அந்தவரியையே நான் வெறுக்கிறேன்.

தேசத்தின் ஜீவநாடியான கலையை பாது காத்து வளர்ப்பவர்களை, சர்க்கார் இவ்வாறு தண்டிப்பது விந்தையான நிகழ்ச்சி என்பதே எனது அபிப்ராயம்!


சினிமா விளம்பரங்களுக்கு

சிறப்பு வாய்ந்த இடம்

எமது அபிமானிகள் அனைவருக்கும்

சுதந்திர தீபாவளி வாழ்த்துக்கள்!

**பாரத் ஸ்டுடியோ**

மவுண்ட் ரோட், :: மதராஸ்.

# செய்தித் திரட்டு

## ராஜ முக்தியில் பாகவதர்.......

வாசகர்கள் வெகுநாட்களாக எதிர்பார்த்து வந்த ஓா நல்ல செய்தி! திரு, தியாகராஜ பாகவதர், இப்பொழுது பூனா, பிரபாத் ஸ்டூடியோவில் தம் சொந்தக் கம்பெனியான 'நரேந்திரா பிக்சர்ஸின்' முதல் படமாக 'ராஜ முக்தி' என்ற தமிழ்ப் படத்தைத் தயாரித்து வருகின்றார் பாகவதரே முக்கிய பங்கு கொண்டு நடித்து வருகிறார். மெயில் வேகத்தில் ஷூட்டிங் நடந்து வருவதைப் பார்த்தால் பொங்கல் புது நாளில் அவசியம் பாகவதர் படம் திரையிடப் படலாம். இப்படக் கதை சமூகமும் புராணமும் கலந்த தொன்று. கதை, சுவாரசியமாக இருக்கு மென்றும் தெரிகிறது. இதுவரை இரண்டு பாட்டுகள் ரிகார்டு செய்யப் பட்டிருக்கின்றன. சென்ற வாரம் சேர்ந்தாற்போல் படப் பிடிப்பு நடந்து வந்திருக்கிறது.

## 'ஓரே வழி'யில் கிருஷ்ணன் மதுரம்

ஆம்! 'ஓரே வழி' தான் பைத்தியக்காரனுக்குப் பிறகு 'ஓரேவழி'யில் கிருஷ்ணன் மதுரம் தமது நகைச்சுவையைப் புகட்ட ஆரம்பித்து விட்டார்கள். 'ஓரேவழி' என்பது எனெஸ்கேயின் அடுத்த சொந்தப் படம். பல நீதிகளையும், சீர்திருத்தக் கருத்துக்களையும், அழகாக தம் இணையிலா சொந்த நடையில் எழுதியுள்ளாராம் தமிழகத் தளபதி, C. N. அண்ணாத்துரை, உயிருள்ள வார்த்தைகளை ஜீவனுள்ள நடிகர்கள் பேசினால் ஓர் நல்லொளி தானே தோன்றும், எல்லாவற்றையும் 'ஓரே வழி'யில் காணலாம்.

"அன்பு செழிக்க அகில மெல்லாம்
இன்பந்துய்க்க வருக ஞான்று!"

அன்பர்களுக்கும், அபிமானிகளுக்கும், உள்ளன்பு மிக்க தீபாவளி வாழ்த்து.

B. M. பட்டாபிராமன், ஆசிரியர்,
புதுமைக் கலா நிலயம்,

தவுல்தாபாத் கிருஷ்ணகிரி,

## என்ன நினைக்கிறீர்கள்?

குகன் பிக்சர்ஸ் தயாரித்துள்ள 'ஜம்பத்தில் ராஜேஸ்வரி, வனஜா, பி. ஆர். மங்களம், அங்கமுத்து முதலிய ஹாஸ்ய நட்சத்திரங்களும், வி. குமார், பி. ஜி. வெங்கடேசன், டி வி. சேதுராமன் முதலிய ஹாஸ்ய நடிகர்களும் நடித்திருக்கிறார்கள். படம் ஏ ஒன் என்று கூறப்படுகிறது. கதையோ ஒரு வாழ்க்கைச் சித்திரம், கதை முழுதும் ஒரே ஹாஸ்யக் களஞ்சியமாக இருக்கிறது என்று படம் பார்த்தவர்கள் சொல்கிறார்கள். மக்கள் மனமாரப் பார்த்து மகிழ்ச்சியடையும் படமாக, விளங்குகிறதாம் ஜம்பம் கதை, வசனம் டைரக்ஷன் நடிப்பு முதலிய எல்லா பாகங்களிலும் பங்கு கொண்டுள்ளார் ஸ்ரீ. வி. குமார் ஸ்ரீ குமாருக்குப் பக்க பலமாக கூட இருந்து உழைத்து பாட்டுக்களை இயற்றியவர் ஸ்ரீ கல்யாண ரமணிகரன். பிரமாதமான படம்,' குறைந்த செலவில் உயர்ந்த நோக்கத்துடன், சொற்ப காலத்தில் எடுத்து முடிக்கப்பட்ட படம் ஜம்பம். இதற்குக் காரண கர்த்தா திரு. வி. குமார் தான் என்று ஒரு பட முதலாளி சொல்கிறார் என்றால், படத்தின் வெற்றியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**புதுமை மிகுந்தது!**

நாகரீகம் நவில்வது, நவீன முறையில், வித விதமாக உங்கள் மனத் திருப்திக்கு ஏற்றபடி, ஜம்பர், கவுன், கோட், டவுஜர், சர்ட்டு மற்றும் பல விதங்களில் செய்துக் கொடுக்கிறோம். ஒரு முறை ஆர்டர் கொடுத்துப் பாருங்கள்,

**பி. விஸ்வா & கோ.**

(புரோப்ரைட்டர்:— பி. விஸ்வா)
பான்ஸி டெயிலரிங் மார்ட்
26, பஜார் தெரு
மயிலாப்பூர் :: மதாராஸ்

### மதனமாலா

ராமாநந்தா பிக்சர்ஸின் 'மதனமாலா' நியூ டோனில் எடிட்டிங் ரூமில் வாசம் செய்து வருகிறது. இதற்குப் பிறகு இன்னும் கொஞ்சம் ரீடேக்கும இருக்கும்போல் தெரிகிறது. படம் டிசம்பர் மாதம் மத்தியில் வெளியிடப்படும் என்று உறுதியாக சொல்லப் படுகிறது. மதனமாலாவிற்குப் பிறகு ஒரு சமூகப் படத்திற்குக் திட்டம் போட்டு வைத்திருக்கிறாராம் திரு வெங்கடாசலம் அவர்கள்.

### என். எஸ். கே. டி. ஏ. மதுரம்

பிரகதி ஸ்டுடியோவில் ராமசந்திர ஐயரின் விஸ்வாமித்ராவின் படப்பிடிப்பு நடந்து வருகிறது. ஹாஸ்யக் களஞ்சியங்களான என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் காமிக் பாகங்கள் 'விஸ்வாமித்ரா'விற் காகத் தற்போது தினமும் பிடிபட்டு வருகிறது. 'விஸ்வாமித்ரா' ஹாஸ்யத்திற்குப் பிறகு, சுகுமார் பிக்சர்ஸின் தேவதாஸியில் நடிப்பார். அது முடிந்ததும், தான் பிடிக்கப் போகும் 'ஒரே வழி'க்கு முழு பிரயத்தனமும் செய்வார். எல்லாம் டிசம்பர் மாதத்தின் மத்தியிலேயே 'ஒரே வழி' நியூடோனிற்குள் நுழைந்து விடும்.

ஸ்ரீமதி கே. தவமணிதேவி



### நன்னிலத்தில்

தஞ்சையின் பிரபலஸ்தரான திரு யாகப் நாடார் அவர்கள் சினிமாத் துறையில் ஈடுபட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது, இவர் தஞ்சை ஜில்லாவில் உள்ள நன்னிலத்தில் சாசுவதமாக ஒரு சினிமா தியேட்டர் கட்ட உத்தேசம் செய்திருப்பதாகத் தெரிகிறது. இந்த முயற்சி நல்லது தான். வெற்றியடையட்டும்.

### சரி ஜோடி

இதுவரையிலும் எஸ். டி. சுப்புலட்சுமி, அஸ்வத்தம்மா, சந்தானலட்சுமி, திருநெல்வேலி பாபா, கண்ணாம்பா, குமுதினி, ராஜகுமாரி, ஜெயா முதலிய நட்சத்திரங்கள் பாகவருடன் நடித்துப் பார்த்து விட்டார்கள். இப்போது பாகவதருடன் ஒரு புது ஜோடி சேரப்போகிறது ராஜமுக்தியில். அதுதான் நட்சத்திரம் பானுமதி. பாகவதர் படம் பொங்கலுக்கே திரையிடப் பட்டு விடும் என்று ஒரு பூனை செய்தி கூறுகிறது.

### வாசகர்களுக்கு!

நமது நிலையத்தில் தொடர்ந்து வெளி வந்த 'கங்கா பிலிம்ஸ் வரலாறு' சில எதிர் பாராத அசந்தர்ப்பங்களால் இந்த இதழில் இடம் பெற வில்லை, அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளி வரும் எதிர்பாருங்கள்!

—ஆசிரியர்.

**சங்கீதவித்வான் வி.டி.எஸ். வாசன் எழுதிய இனிய சிறு கதை (ராஜஸ்ரீ) என்ற புனைப் பெயரில் அடுத்த இதழில் காணுங்கள்.**

# தாரகைகள்!

(எம். எஸ். கமலா)



[வாசகர்களின் மனதில் 'கன்னி தெய்வம்' காட்சியளிக்கும், அதன் ஆசிரியையாகிய திருமதி M. S. கமலாவைப் பற்றி அதிகம் விளக்கிக் கூற தேவையில்லை. பெண் எழுத்தாளர்களிலேயே முக்கிய ஸ்தானம் வகிக்கும் இச் சோதரி எழுதியுள்ள "தாரகைகள" உண்மையாகவே நட்சத்திரங்களாக மின்னுகின்றன. நீங்களும் ஒரு பார்வை பாருங்கள்!—ஆசிரியர்]

"தாரகைகள்" என்ற தலைப்பைக் கண்டதும் நகைக்கிறீர்களா? நகைக்காதீர்கள். நன்றாய்ப் பாருங்கள், ஆனால் கண்களை மாத்திரம் கசக்காதீர்கள்.

ஜோதிர் மண்டலம், நக்ஷத்திர மண்டலம், வான சாஸ்திரம், இப்படி எத்தனையோ பெயர்களில் வெளிவரும் நக்ஷத்திர மண்டலங்களின் புராணங்களை நீங்கள் படித்துமிருக்கலாம். படிக்காமல் அசட்டையாய் பத்திரிகைத்தாள்களைப் புரட்டியுமிருக்கலாம். ஆனால் உண்மையில் வானவீதியில் வெள்ளிப் பொட்டுக்களென மின்னும் அவைகளின் பிறப்பின் ரகசியத்தை அறியாதிருப்பின், இனி அறியுங்கள்.

புராண யுகங்களில் தவம் செய்து தவறி விழுந்தவன் முதல், தவறிழைக்காமல் தர்ம பரிபாலனம் செய்த அரசர்கள் வரை, வானத்தில் நக்ஷத்திரங்களாய் மின்னுகிறார்கள். அவர்கள் மாத்திரம் தானா? என்று ஐயுறுகிறீர்கள் கற்பைக் காத்தப் பெண்டிரும், கஷ்டங்களுக்கு ஆளான காதலிகளும், தவமுனிகளின் சீடர்களும் தாரகைகளாய் விண்ணில் மின்னுகின்றனர்.

அதிசயங்களுக்கும், அற்புதங்களுக்கும், அறிவிற்கும் அழகையளிக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டில் பூவுலகிலும் தாரகைகளுக்குக் குறைவில்லை! இடறி விழுந்தால் தாரகைகள்தாம்.

தாரகை...ஆம்!...நக்ஷத்திரம் என்ற இந்தப் பெயர் எவரால், எப்பொழுது வெள்ளித்திரை தாரகைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளதோ, நாம் அறியோம். ஆனால், திரை உலகில் தோன்றிய சிறு குழந்தையாயினும், அனுபவ நடிக நடிகையாயினும், கிழவர்களாயினும் அவர்களுக்கு நக்ஷத்திரம் என்ற பெயர் எப்படியோ வந்து ஒட்டிக்கொண்டு வருகிறது.

நீங்கள் படுத்து சிறிது நேரம் வானத்தையே உற்றுப் பாருங்கள் அப்பொழுது தெரியும் சினிமா நக்ஷத்திரங்களுக்கு தாரகைகளென்ற பெயர் அளிக்கப்பட்டது நூற்றுக்கு நூறு பொருத்தம் தானென்று

ஆயிரம் ஆயிரம் வருடங்களாய் வெளியில் காய்ந்து, மழையில் நனைந்து, காற்றில் பறந்து வந்த குப்பை செத்தைகளுக்குக்குறுக்கச் சுவராய் நின்று தவமியற்றிப் பிரம்மபதத்தையோ, இந்திர பதவியையோ கைபிடிக்கும்சமயத்தில் தேவலோக நடியின் காம வலையில் வீழ்ந்தோ, அல்லது வேறெதிலாகிலும் சிறிதே தம் மனத்தைச் செலுத்தி, செய்த தவப் பயனை அரை நொடியில் இழந்து நிற்கும் அநேக தல முனிகளும் தாரைகள்தாம. அவர்களின் சிந்தையைக் கலக்கிய சிங்கார சீமாட்டிகளும் தாரகைகளே!

அது போல் நம் திரைப்பட தாரகைகளும், எத்தனையோ கஷ்டப்பட்டு, பெயரும், புகழும், பணமும் திரட்டி மின்னிக் கொண்டிருக்கும்போதே திடீரென்று மறைந்து விடுகிறார்கள்! காரணம்?

அது தான் வானத்தைப் பாருங்கள் என்கிறேனே! விண் மீன் ஒரே நிலையிலிருக்கிறதா? பளிச் பளிச் சென்று சிறிது நேரம் மின்னும்! சிறிது நேரம் இருந்த இடம் தெரியாது உள்ளடங்கி விடும். ஒன்று ஓடி இடம் விட்டு இடம் மாறி நிற்கும். சில வெகு வேகமாய் ஓடப் போய் தரையில், விழுந்து மறையும், மறைந்து விட்டதினால் அது தாரகையல்லவா?

மறைந்தாலும் தாரகைதான். உதிர்ந்தாலும் தாரகைதான், அங்காரக, சுக்கிர, துருவ

மண்டலங்களைப் போல் நிலைத்து சுடர் விட்டுப் பிரகாசித்தாலும் தாரகைகள்தாம்.

திரைப்பட தாரகைகளுக்குச் சிறியதோர் விண்ணப்பம், செவி சாய்ப்பவர்களுக்குத் தான்.

திரை நக்ஷத்திரம் என்ற ஒரு பெயர் மாத்திரம் பெற்றுவிடின் போதாது. அதைப் பெற்று விட்டால் தங்களுக்கிணையில்லை என்ற கர்வப்போர்வையைத் தங்களையும் அறியாது போர்த்திக் கொள்கின்றனர்! அது தவறு.

நக்ஷத்திரம் என்ற பெயரின் இணையற்ற பிரகாசத்தை என்றும் நிலை நிறுத்தும் நக்ஷத்திரம் தான் உண்மை தாரகை.

தாரகைக்கு வேண்டிய முக்கிய அம்சங்களை தாரகைகளை கவனிக்கவேண்டும். முதலில் நல்ல முகவெட்டு. இரண்டு மனோபாவங்களை அனுயாசமாய் முகத்தில் தோற்றுவித்தல். எல்லோரையும் சமமாய் பாவித்தல். ஆடம்பரச் செலவுகளைக்குறைத்துக் கொண்டு வாழ்க்கை வழியில் கட்டு திட்டத்துடனிருத்தல் திரைபபட நக்ஷத்திரங்கள் என்ற பெயர் என்றும் நின்று, அடுத்து வரும் சந்தானங்களும் அவர்களுக்கொரு உயரிய இடமளித்து நக்ஷத்திரக்களஞ்சியம் என்ற ஏட்டுப் பிரதிகளை சிருஷ்டிக்கப்படவேண்டிய இடத்தைப் பெறுபவர்களே தாரகைகளாவர்.

ஒரு படத்தில் அதி அற்புதமாய் நடித்து மற்றொரு படத்தில் நடிப்பின் லக்ஷணமே இல்லாமல் போகும்படி தாரகைகள் செய்யும் குற்றம் யாது?

தங்களுக்கென்று தனிப்பட்ட நடிப்பைப் பெற்றுள்ளஎந்தத் தாரகையும் எப்பொழுதும் வீழ்ச்சியடைவ தில்லை. ஆனால் பிறர் கைப் பொம்மையாகும் தாரகைகள் இடத்திற்கு தக்கபடி பச்சோந்திகளாக இருப்பது எதனால்......?

அதே திரை உலகில் சில தனிப்பட்ட மங்காத படைப்பாளர்களிருக்கின்றனர்.

வடநாட்டில் காலம் சென்ற ஸ்ரீமான் ஹிமான்ஷுராய் (பாம்பே டாக்கீஸார்) வெளியிட்ட படங்கள் நூற்றுக்கு எழுபத்தைந்து சதம் வெற்றிதான். சென்ற இடமெல்லாம் வெற்றி தான். அதுபோல் நடிப்பிலும், சங்கீதத்திலும் "சைகால்" மறைந்தும் மறையாத நக்ஷத்திரம் தான்.

ராஜ் கமல்ஸ், சாந்தாராம் கூடிய மட்டில் தம் திறனை வெளியிடுகிறார். அவர் திறமையை திறம்படக்காட்ட அவருக்கொரு 'ஜெய் ஸ்ரீ' கிடைத்து விட்டாள்.

அதற்கேற்றபடி வடநாடு நக்ஷத்திரங்களைத் திரட்டுகின்றதே ஒழிய, அவைகள் வீழ்ச்சியை நாம் அதிகமாய்க் காண வில்லை, நாம் பார்க்கத் தொடங்கியது முதல்.

தேவிகாராணி, சாதனாபோஸ், சாந்தா ஆப்தே, லீலாசிட்னிஸ், சோபனா சம்ரத், துர்க்கா கோட் முதலிய பிரபல பெண் தாரகைகள் இன்னும் தங்கள் புகழ்ப் படியிலேயே மேலும் மேலும் ஏறி வானத்திலிருக்கும் தாரகைகளையும் பிடித்து விடுவார்கள் போலிருக்கிறது.

நம் தென்னாட்டில் புது முகத்தை நக்ஷத்திரமாக்கும் சக்தி டைரக்டர் கே. சுப்பிரமண்யத்திற்கும், ஜெமினியின் நிரந்தர தாரகைகளுக்கோர் தனிமௌஸும், என்றும் அழியாத இடம் பெற்று விடுகிறது.

தாரகைகள் மறைந்தாலும் அவர்கள் புகழ் மறையக்கூடாது. மங்காத நக்ஷத்திரங்கள் தான் தாரகைகள். அன்று படவுலகிற்கே உயிரை ஊட்டின லக்ஷ்மிகள் எத்தனைபேர்கள். இன்று அவர்களில் ஒரு லக்ஷ்மி (சந்தான லக்ஷ்மி)மட்டும்எந்தப் படத்திலாயினும் காண முடிகிறது. ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மி, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, இவர்களெங்கே? எஸ். பி எல். தனலக்ஷ்மி, ஜி. சுப்புலக்ஷ்மி இவர்கள் அவ்வப்பொழுது மட்டும் தோன்றுகிறார்கள்.

ஸ்ரீமதி விஜயாவும், சகுந்தலாவும் திரைப் படத்திற்கு வெகு தூரத்திலிருக்கின்றனரா? ஒரே ஒரு படத்துடன் எம். எஸ். மோகனாம்பாள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டார்.

தங்களுக்கே உரித்தான தனிப்பட்ட திறமையை இழக்காமலிருப்பவர்கள் ஒரு சிலர் இருக்கின்றனர்! இல்லையென்று மறுக்க முடியாது.

ஹாஸ்யத்தில், என். எஸ். கே, தம்பதிகள், புளிமூட்டை, ஆள்வார், காளிரத்தினம்,

ராஜகாந்தம், கே.ஆர். சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன் முதலியவர்கள்.

தாரகைகள் எந்த வேஷத்தை அணிந்தாலும் அனுபவித்து நடிக்க ஸ்ரீமதி எம். எஸ். எஸ், ஜெயம்மா, கண்ணம்மா, ராஜகுமாரி, புஷ்பவல்லி, தவமணி, கூடிய மட்டும் செல்லம் முதலியவர்களைக் குறிப்பிடலாம்.

எத்தனையோ புதுத்தாரகைகள் தோன்றி விட்டனர், தோன்றுகிறார்கள். தோன்றவும் தோன்றலாம் யாராயினும் சரி.

'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்றபடி தோன்ற வேண்டும். தாரகைகளென்ற பெயர் மறையக் கூடாது. அதிலிருக்கும் சிறப்பை அறிய வேண்டும்.

"அரிதரிது மானிடராய்ப் பிறப்பதரிது"

என்று பாடியுள்ளார்கள் பெரியார்கள். அப்பேர்பட்ட மானிடப்பிறவியில் சினிமா சகாப்தத்தில் வெள்ளித்திரை தாரகைகளாகவே பிறந்த தாரகைகளாவதற்கே என்று பிறந்த பால நக்ஷத்திரம் முதல், முதிய நக்ஷத்திரம் வரை தாங்கள் ஒரு முறைத் தாரகை என்றெடுத்த பெயருக்கு இழுக்கு வராமல் எந்தத் தாரகை சிரஞ்சீவிப் பெயருடன் திகழ்ந்துப் பிரகாசிக்குமோ அந்தத் தாரகைதான் என்றும் ஒளி குன்றாத உயரிய தாரகை.


குறிப்பு:—சில பிரக்கியாத தாரகைகளுக் குத்தங்களைக் குறிப்பிட வில்லையே என்றிருக்கலாம். அதனால் அவர்களைத் தாரகைகளல்ல என்று எழுதாமல் இருக்க வில்லை.

தாரகைகள் என்ற பெயர் எப்பொழுது அளிக்கப்பட்டதோ அப்பொழுதே, உதித்த, உதிக்கும், உதிக்கப்போகும் எல்லா தாரகைகளும் அதில் சேர்ந்தவர்கள் தாமே!

விண்ணில் கணக்கற்ற விண்மீன்கள், திரையுலகில் கணக்கற்ற "தாரகைகள்!"

வாழ்க "நவீன சினிமா நிலையம்." வளர்க திரைப்பட உலகம். ஓங்க தாரகை கணங்கள்.


# சுதந்திர தீபாவளி நாளில்




உங்கள் நண்பர்களுக்கு வாழ்த்து கூறும் போது "எவரெடி" இங்கியினுல் எழுதி அனுப்புங்கள். அப்பொழுதுதான் உங்கள் உள்ளம் திருப்தி படும் நண்பர்கள் மனமும் மகிழ்வுறும். 'எவரெடி' இங்கி உபயோகிக்கும் நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்து!

ஸ்டாக்கிஸ்ட்:—

**C. N. சுப்ரமணியம் & CO.,**

11, பந்தர் தெரு :: சென்னை.

# இழந்த காதல்

[அ. வரதராஜன்]


[இக்கட்டுரையாளர் அ. வரதராஜன் பட உலக வசனகர்த்தா. எனவே வாழ்க்கை சம்பவங்களை அழகாக எழுதும் திறனும் பெற்றவர். ஒரு சினிமா நடிகையின் இழந்த காதலை அவரது பேனா முனை எழுதியுள்ளது. படித்துப் பாருங்கள் !—ஆசிரியா]

என். எஸ். கே. நாடக சபையாரின் புகழ் மிகு இழந்த காதல் நாடகக் கதையல்ல....ஓர் சினிமா நடிகையின் இழந்த காதல் சரிதை.

தீபாவளிப் பண்டிகையின் அறி குறியான பட்டாஸ் வெடிகளின் பட்...பட்...படார், புஸ்ஸ்ஸ்....டப், என்ற சப்தங்களைக் கேட்டு விழித்துக் கொண்டாள் ஜனகவல்லி. ஸ்னன அறைக்குச் சென்று அடுப்பைப் பற்ற வைத்து அதன் மீது தண்ணீர் நிறைந்த அண்டாவைத் தூக்கி வைத்து விட்டு, பல்விளக்கி, முகம் கழுவி, குத்து விளக்கை யேற்றி வைத்துப் பின் தலையில் எண்ணெயிட்டுக் கொண்டாள். அவள் கணவன் மிஸ்டர், ராவ் ஒரு தையற்காரர். தீபாவளி ஆர்டர்களைத் தவறாமல் முடித்துக் கொடுக்க வேண்டி, இரவெல்லாம் கடையில் வேலை அதிகமாக விருப்பதால் வீட்டுக்கு வரமுடியா தென்று, தனக்காகக் காத்துக் கொண்டிருக்காமல் அவள் வேலையைக் கவனிக்கும் படியும் சொல்லி விட்டுப் போன படியால், ஜனகமும் தன் வேலையைக் கவனிக்கலானாள். மங்களஸ்னனம் செய்து முடித்து உள்ளே வந்தாள்.

நாலைந்து பெட்டிகளின் மேல் வைக்கப்பட்டிருந்த ஒரு டிரங்க் பெட்டியைத் திறந்து தீபாவளிக்காக வாங்கிய பட்டுப் புடவையை எடுத்துக் கொண்டு திரும்பும், போது பெட்டி கீழே கவிழ்ந்து விழ, உள்ளிருந்த புடவைகள், ரவிக்கைகள், நகைகள், பௌடர் டப்பி முதலியவைகளும் கீழே சிதறின. அவைகளோடு ஒரு சிறிய போட்டோவும் விழுந்தது.

ஜனகம் போட்டோவைக்கையில் எடுத்தாள். கமலமெனத் திகழ்ந்த அவளது இருவிழிகளிலும் கண்ணீர் பெருகிற்று. அவளது மனோவேகம் அதிகரித்துப் பின்னோக்கிச் சென்று, ஒன்றரை வருஷத்துக்குமுன் நடந்த சம்பவங்களின் மீது மோதி 'டப்' என்று நின்றது.



ஆம்!...அப்போது அவள் ஒரு சாதாரண சில்லறை நடிகை! அநேக படங்களில் ஐந்து ரூபாய் கூலிக்குத் தலையை நீட்டும் தவநடிகையரில் ஒருத்தியாகத் திகழ்ந்தாளே யொழிய, எநதப் படத்திலும் அவள் தலையைக் காண முடியாது. கும்பலோடு கோவிந்தா போட்டு வந்தாள்.

சென்னையில் சிறந்து விளங்கும் ஒரு படக் கம்பெனியில் நிரந்தர சில்லரை நடிகையாகச் சேர்ந்து சொற்பம் சம்பாதித்து வந்தாள். அப்போது சென்னையில் அநேக நாடகச் சங்கங்கள் தோன்றின. அவைகளில் காலத்தை யொட்டி, பெண்களையும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஜனகத்தின் மீதும் கண்கள் விழுந்தன. நடராஜ் என்னும் நாடக டைரக்டர் அவளைத் தனது நாடகம் ஒன்றிற்கு ஒப்பந்தம் செய்தார். ஜனகத்தின் வசீகரத் தோற்றத்திற்காக அவளை ஒப்பந்தம் செய்தாரே தவிர, அவள் பாடும் திறமை யில்லாதவள் என்பதையும், தமிழ்கூடச் சரியாகப் படிக்கத் தெரியாதவள் என்பதையும் கவனிக்கவே யில்லை. நடராஜ் மிகவும் கஷ்டப்பட்டு அவளுக்குப் பாட்டும், பேச்சும், நடிப்பும் கற்றுக் கொடுத்து நற்பெயர் வாங்கிக் கொடுத்தார்.

ஜனகம் இயற்கையிலேயே நற்குணம் படைத்தவள் குடும்பத்தைக் காப்பாற்றி வந்த தந்தை திடீரென இறந்து விடவே, வேறு ஆதரவுமின்றி வாழ்க்கையை நடத்த சினிமா உலகில் பிரவேசித்தாள். சினிமா உலக நாரீ

மணிகள் பொது ஜனங்களால் வெறுக்கப்படுவதை யுணர்ந்து, தன்வரையில் தூயவாழ்க்கை நடத்தி வந்தாள். இவ்வாறாக இவளது அடக்க வொடுக்கம், ஆடம்பரமற்ற தன்மை, முதலிய நற்குணங்களால் நடராஜின் மனதைக் கவர்ந்து விட்டாள். அவர் நடத்தும் நாடகங்கள் அனைத்திலும் ஜனகவல்லிக்கே பிரதான பாகம் கொடுத்து வந்தார். அவளும் விரைவில் முன்னுக்கு வந்தாள். இது வரையில் அவளது சாமர்த்தியத்தை யுணராமலிருந்த முதலாளிகளும் கண் திறந்தனர். கேட்க வேண்டுமா?... கம்பெனியில் அப்போது எடுக்கப்பட்டு வந்த படத்தில் ஒரு இரண்டாந்தர வேடமும் கொடுத்தனர்.

ஜனகம் மனமகிழ்ந்தாள். தனது முன்னேற்றத்துக்குக் காரணம் யாரென வுணர்ந்தாள். நாளடைவில் நடராஜிடம் அவளுக்கிருந்த பயம்—பக்தியாகவும், பக்தி—அன்பாகவும் மாறியது. ஆனல் வெளியிடத்துணியவில்லை. ஏன்?... நடராஜ் இதர டைரக்டர்களைப்போல் அல்லாமல் மிகவும் யோக்கியமானவ'. சினிமா நடிகையர் என்றால் விஷமெனக் கருதுபவர். பொதுவாகப் பெண்களிடம் அதிகமாகப் பழக மாட்டார்.

எத்தனை நாளைக்குக் காதலை மறைத்துப் புதைத்து வைத்திருக்க முடியும்? கடைசியில் ஒரு நாள் ஜனகம் துணிந்து தனது மனதைத் திறந்து நடராஜிடம் கூறி விட்டாள். நடராஜ முதலில் திடுக்கிட்டாலும் பிறகு அவளுக்குப் பல விதமாக எடுத்துரைத்து தன்னைக் காதலிக்க வேண்டாம் எனக் கூறினர். ஆனல் அவள் கேட்காமல் பிடிவாதமாக இருந்தமையால், 'ஆகா! சினிமா உலகத்திலும் இத்தகைய உத்தமிகள் உள்ளனரா?'' என மகிழ்ந்து ஜனகத்தின் காதலை ஏற்றுக் கொண்டார். காதலர் இருவரும் இரகசியமாக இன்புற்று வந்தனர். அந்தோ! பின்னல் வரும் பேராபத்து எப்படித் தெரியும்?...

நாளடைவில் இரகசியம் எப்படியோ ஜனகததின் தாயாருக்கு எட்டிவிட, அவ்வம்மையார் தண்டோரா போட்டு நடராஜனை வாயில் வந்தபடித் தூற்ற ஆரம்பித்தனள். இதனல் மனம் உடைந்த நடராஜ் சிறிது காலம் ஜனகத்தைக் காணுமல் இருந்து வந்தார். அவர் ஏழை என்ற ஒரு தவறு தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனல் ஜனகமோ மனம் மாறினுனில்லை. நடராஜைத் தவிர வேறு ஒருவரையும் நினைக்க முடியாதென உறுதியுடன் கூறி விட்டாள்!...தாயின் வாதம் அதிகம் ஆக ஆக பெண்ணின் பிடிவாதமும் அதிகரித்தது சதா நடராஜ தியானமும் அவனது போட்டோவுக்குப் பூஜையும் நடத்தி வந்தாள்.

கடைசியில் ஜனகத்தின் தாய் ஒரு உபாயத்தைக் கைக் கொண்டாள். ஒரு நாள் இரவு தன் கழுத்தில் ஒருகயிற்றை மாட்டிக்கொண்டு தயாராக இருந்தாள். கம்பெனியிலிருந்து பெண் வந்ததும் தன் இஷ்டப்படி நடக்காவிட்டால் தற்கொலை செய்து கொள்வதாகப் பயமுறுத்தினள். பாவம்! சிறு பெண்! என்ன செய்வாள்? பெற்ற தாயின் தற்கொலைக்கு மனம் ஒப்புமா? தாயின் இஷ்டப்படி நடப்பதாகத் தாயின் மீதே ஆணை யிட்டாள். சத்தியம் வாங்கிக் கொண்ட தாய், ஏற்கனவே தான் ஒரு கண் வைத்திருந்த, கம்பெனியில் தையற்காரராக இருந்தவரும் கொஞ்சம் பணக்காரருமான மிஸ்டர். ராவ் அவர்களுக்கு ஜனகத்தை மணம் செய்து வைத்து விட்டாள். இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட நடராஜ், தன்னல் ஒரு பெண்ணின் வாழ்க்கை கெடுவானேன் என்று எண்ணி ஏங்கி வெளியூர் சென்று விட்டான்.

ஜனகமும் தனது விதியை எண்ணி தாமரையிலைத் தண்ணீராகக் காலங் கழித்து வந்தாள். கலியாணமான பின் மிஸ்டர் ராவ். கம்பெனி வேலையை விட்டு சொந்தத்தில் ஒரு தையற் கடை வைத்து நடத்தி வந்தார். ஜனகத்தையும் அன்பாகவே நடத்தி வந்தார். ஆனல் ஜனகமோ அவரது அன்பை ஏற்றுக் கொண்டாளே யொழியப் பதிலுக்கு அன்பு செலுத்த முடிய வில்லை. மனைவியின் கடமைக்காக, மனத்தகத்தே குடி கொண்ட நடராஜை மறக்கவே முடிய வில்லை... ஜனகத்தின் மனமாகிய ஆழமான சமுத்திரத்தின் அடியில் நடராஜின் உருவம் ஒரு கிளிஞ்சல் போல் நிர்மலமாகப் பதிந்திருந்தது.

கடந்த தீபாவளியின் போது, நடராஜ் சொன்னன்,—''கண்ணே! அடுத்த தீபாவளியை நாம் இருவரும் சேர்ந்து கொண்டாடுவோம்'' என்று...ஆனல் அந்த அடுத்த தீபாவளியாகிய இந்த வருஷப் பண்டிகையை ஜனகம் நடராஜுடைய போட்டோவுடன் தான்

# சினிமாத் தொழிலை : : சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும்

[மிஸ் K. தவமணி தேவி]

[இதயத்தில் தோன்றிய வார்த்தைகளை அப்படியே அழகாக எழுதியுள்ளார் இக்கட்டுரையாளராகிய பிரபல சினிமா நட்சத்திரம் மிஸ் K. தவமணிதேவி, தமிழ்ப் படஉலகின் பகட்டை மறைமுகமாக தாக்கவில்லை ஆனால்—நேரிடையே விளக்குகிறார். "சினிமாத் தொழிலை சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும்" என்று தைர்யமாக—துணிச்சலாகப் பல ஆதாரங்களுடன் கூறுகின்றார்! தவமணி கட்டுரையை படித்துப் பாருங்கள்!]

—ஆசிரியர்.

•



**மேல்** நாட்டு, படங்கள் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்று தொழிலிலும் விருத்தியடைந்து வருவது யாவரும் தெரிந்ததே. அதற்குப் பல காரணங்களிருக்கின்றன அவர்கள் கதைக்கு பொருத்தமான கலை ஆர்வம் நிறைந்த நடிகர்களைத் தேர்ந்தெடுப்பதும் தொழிலை தறியாகக் கொண்டிருப்பதும், வர்ணனைகளுக்கு ஏற்ற சிலைகளைப் போன்ற தேக அமைப்பும், குளிர்ச்சியான முகமும், பொருத்தமான நடிப்பும், நடிகரை, நடிகர் தொழில் முறையில் மதித்து கௌரவிக்கு மேன்மையான குணங்களும், தேகத்தைக் காப்பாற்றுவதற்கு உள்ள முறைகளையும், கொண்டுள்ள நடிகர்கள் நடிப்பதே, மேலும் மேலும், வெற்றிக்குக் காரணங்களில் ஒன்றாகும். சகல அம்சங்களிலும் சிறந்து விளங்கும் ஆங்கிலப் படங்களை நாம் பெரிதும் விரும்புகிறோம் அதற்கடுத்தபடியாக வட நாட்டு ஹிந்திப் படங்களை விரும்புகிறோம். நம் தென்னிந்திய படத் தொழில் மிகவும் மோசமான நிலையை அடைந்து வருகிறது. சில நடிகர்களுக்கு முகவசீகரம், நடிப்பு இருப்பதாக நினைத்தாலும், தேக அமைப்பு என்னளவும் கிடையாது. அழகுக்குப் பதிலாக வியாதியால் பீடிக்கப்பட்ட தேகமே கொண்டு உள்ளார்கள் (Make up) (Camera) வேஷத்தையும் கமெராவையும் வைத்து மெருகு கொடுத்து ஜனங்களுக்குக் காட்டு

---

கொண்டாட நேர்ந்தது. எல்லாம் விதியின் செயல்!

ஜனகம் பெருமூச் செறிந்தாள். நடராஜின் போட்டோவை மார்போடணைத்துக் கொண்டாள். சுற்று முற்றும் பார்த்தாள். போட்டோவுக்கு ஒரு முத்த மளித்து மறுபடியும் மார்போடணைத்து விட்டுப் பெட்டியில் வைத்து மூடும் போது "ஜனகம்!" என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தார் மிஸ்டர், ராவ். "எல்லாம் தயார்!" என்று சொல்லிக் கொண்டே, இழந்த காதலை எண்ணிக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வந்தாள் ஜனகம்!...அன்றிரவு தீபாவளி ஸ்பெஷல் காக்ஷியாக கார்த்திகேயா தியேட்டரில் "இழந்த காதல்" தமிழ் நாடகம் நடைபெற்றது. தம்பதிகளும் சென்றனர். ஜனகம் தான் இழந்த காதலை எண்ணிக் கொண்டிருந்தாளா? இழந்தகாதல் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாளா? என்பது அவளுக்கும் அவளைப் படைத்த ஈசனுக்குமே தெரியும்! ஆனால் அவள் கண்களில் மட்டும் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது!...காரணம்! அந்த நாடகத்தில் ஜெயபாலாக நடித்தவர்—நடராஜ்!

கிறார்கள். என்றாலும் இவைகளையும் மிஞ்சி விடுகிறது நடிகர்களை அணைத்துக் கொண்டிருக்கும் நோய் நிறைந்த சொரூபம். நாடகமேடையிலாவது அழகு, நடிப்பு, பாட்டு என்ற உண்மை பொருளை, கலையைகண்டு ரசித்தோம். சினிமாவில் ஏமாற்றமே அடைந்தோம். இப்பொழுதிருக்கும் தென்னாட்டு படத் தொழிலை காட்டிலும் தமிழ் நாட்டு நாடகமே சிறந்தது. இங்ஙனம் சினிமா தொழில் சீரழிந்து போய் கொண்டிருக்குமாகில், நாடகக்கலை சிறந்து, தொழிலிலும் விருத்தியடைந்து மக்களின் அன்பைப் பெற்று விடும் சினிமா இருக்கிற இடம் தெரியாமல் போய் விடும். இன்றைய சினிமா தொழில் சிறிதளவாவது முன்னேற்றமடைந்திருக்கிறது என்றால் அந்தப் பெருமை நாடக நடிகர்களாலேயேதான் என்பது விளங்கும். ஏன்? நம் நாட்டில சிறந்த அம்சங்கள் பொருந்திய' கலைஞர்களும், அறிவாளிகளும் இல்லையா? இருக்கிறார்கள். இருந்தும் ஏன் படங்களில் நடிக்கவில்லை? நடிக்க காத்திருக்கிறார்கள், அவர்களை எந்த டைரக்டர் (Director) முதலாளி விரும்புகிறார்கள்? அப்படி தப்பித் தவறி நடிப்பதற்கு சந்தர்ப்பம் சினிமாவில் கிடைத்து விட்டால எவ்வளவு கஷ்டங்கள் நஷ்டங்கள் ஏற்படும்? ஆண் நடிகனாகில் டைரெக்டரின் கையாளாகவும், காமக் கடிதம் கொண்டு போகும் தூதனாகவும், மற்றும் வேலைகளுக்கும் ஆளாக இருக்கவேணும். இந்த இழிவான செயலை கண்டு மனம் கொதித்து மறுத்தானாகில் மேற் சொன்ன டைரெக்டரின் ஆத்திரத்திற்கு ஆளாகி விடுகிறான் அந்த ஏழை நடிகனிடம்வஞ்சம் தீர்ப்பதற்கு, அவன் முகத்தில் தாடி மீசை ஏறிவிடும். அழகிய வாலிப முகத்தில் சுருக்கங்கள் போன்ற வேஷம் தென்படும் இந்த துரோக விஷமச் செயல்ஆணுக்கு. பெண்ணை எடுத்துக் கொள்வோம் அந்த நடிகை பட சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு காமயந்திரமாக இருக்கவேணும், மறுத்தாளாகில், அவள் பல விதமான பொய் பிரசாரங்களுக்கும், திட்டுகளுக்கும், சினிமா அதிகாரிகளின் மிருகத் தன்மையான ஈவு இரக்கமற்ற விஷமப் பேச்சுக்களுக்கும் ஆளாகி வெளியேறுவாள். சிலர் இவற்றையும் தாங்கி கொடுத்த வேஷம் அதாவது அதிகாரிகளின் யந்திர சொரூபியான சுதாநாயகி, கறுப்பாயி, மூக்காயி, காக்காயிகளின் தோழிக்குத்தோழி, தோழிக்குத்தோழியென கண்ணுக்குப் பட்டும் படாமலும் ஒளிமங்கி படத்தில் தென்படுவாள். நாளடைவில் வறுமையும் தூண்டுதலும் பேராசையும் அந்த ஏழைப் பெண்ணைப் பிடித்தாட்ட அவளும் மேற் கூறிய விலை மாதருடன் ஒருவளாகி விடுகிறாள். பணம், புகழ், தொழில் அவளை அடைகிறது. அத்துடன் அவள் வாழ்க்கையை நரகமாக்க தொத்து நோய் அவளைப் பற்றி விடுகிறது. சினிமா சம்பந்தப்பட்ட அதிகாரிகளிலிருந்து வேலையாள் வரை அநேகர் கெட்ட நடத்தையினால் உண்டாகும் வெனேரியல், (Venereal) குஷ்டம் (Jeprosy) சிரங்கு முதலிய கொடிய நோயையுடையவர்களே. இவ்வித தொத்து நோயைக் கொண்ட நடிகர்களுமிருக்கிறார்கள். இந்த நடிகர்கள் அணிந்த உடைகளையே மற்றய நடிகர்களும் நடிக்கும் போது அணிய வேண்டுமென வற்புறுத்துகின்றனர் அவ்விதம் அணிவதால் தொத்து நோய் பரவ ஏதுவாகிறது (School) பள்ளிக்கூடங்களில் (Doctor) டாக்டர் இருப்பது போல் சினிமா தொழில் சம்பந்தபட்டவர்களுக்கும் ஒரு டாக்டர் அவசியம் ஏற்படுத்த வேண்டும்.

அவ்விதம் தொத்து நோய்களுக்குப் பாத்திரமானவர்களை சினிமா தொழிலிலிருந்து அகற்றி நோய் குணமாகும் வரையில் தொழில் செய்யக் கூடாதென தடையுத்தரவு சர்க்கார் போட வேண்டும். மதுவினால் ஜனங்கள் கெடுகிறார்கள் என சர்க்கார் மதுவை ஒழித்ததும் சந்தோஷமே குடியை ஒழித்து விடுவதுபோல் இந்த மறைமுகமான விபசாரத்தை சினிமா தொழிலிலிருந்து விலக்க சர்ககார் முன்வர வேண்டும். குழந்தை வாலிபர் வயோதிகர் வரை தொழில் செய்யும் இத்துறையில் இவ்வித அநீதியை நடக்க வொட்டாது தடுக்க சர்க்கார் முன் வர வேண்டும். (C I D) ரகசிய போலீஸ் ஏற்படுத்த வேண்டும் கெட்ட நடத்தையில் பிரவேசித்தவர்களை இரண்டு வருஷமோ ஒரு வருஷமோ தொழில் செய்ய அனுமதி தரக்கூடாது.

உயர் குடும்பங்களில் பிறந்து கௌரவமான வாழ்க்கை நடத்தும், பணக்கார மக்கள் ஈடுபட வேண்டும். சங்கீதம், நாட்டியம் முதலிய கலைகளுக்கு கௌரவம் தந்து கலையைக் காப்பாற்றினீர்கள். அதுபோல் உங்கள் தமிழ் நாட்டு சினிமா தொழிலையும் உயர்ந்த கலைக் கோயிலாக மாற்ற உங்களால் ஆனதைச் செய்யுங்கள்.

# கன்னிகா

டைரக்ஷன்
ஸ்ரீராமுலு நாயுடு



சரோஜினி
வரதன்
சந்தானலக்ஷ்மி
ஹரிணி
காளி ரத்தினம்
ஹேமமாலினி
பாலசுப்ரமணியம்
லலிதா, பத்மினி
கிருஷ்ணன்
மதுரம்

## தீபாவளி வெளியீடு

பக்ஷிராஜா
தயாரிப்பு...

PAKSHIRAJA
Studios...

**NARAYANAN Co**
*Release..*

# நவீன கச்ச தேவயானி

(எம். பி. சீனிவாசன்)

இடம்:—தேவலோகம். காலம்:—காலை.

(தேவலோகத்தில் இந்திரனும் மற்றும் முள்ள தேவர்களும் அப்பொழுது நடக்கிற பாட்டுக் கச்சேரியில் ஈடுபட்டு ஆனந்தத்தில் மூழ்கியிருக்கிறார்கள். அச் சமயம் நாரதர் அங்கு வருகிறார்.)

தேவேந்திரன்:—குட்மார்னிங் (Good-morning) நாரதரே! வரவேண்டும். ஏது இவ்வளவு தூரம் கிருபை செய்தது.

நாரதர்:—தேவேந்திரா! நான் இப்போது உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்வதற்காக வந்திருக்கிறேன். அதாவது பூலோகத்தில் அசுரர்கள் அட்டூழியம் செய்து வருகிறார்கள் என்பது உனக்கு தெரிந்த விஷயம். அசுரராஜனான விருஷபர்வா தன் குருவான சுக்கிராச்சாரியாரிடம் சஞ்சீவினி மந்திரத்தைக் கற்று அதன் மூலம் இறந்த அசுரர்களைப் பிழைப்பித்து வருவதால் உனக்கு வெகு சீக்கிரத்தில் ஆபத்து வரப்போகிறது. நீ அதிலிருந்து தப்ப வேண்டுமானால் நீயும் சஞ்சீவினி மந்திரத்தைக் கற்றுக் கொண்டு இறந்த தேவர்களின் மீது பிரயோகிக்க வேண்டும். என்னமோ நான் சொல்லுவதைச் சொல்லிவிட்டேன். பிறகு உன்னிஷ்டம்.

தேவே:—நாரதரே! சஞ்சீவினி மந்திரத்தை அறிந்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னீரே யொழிய அதை யார் மூலமாக எப்படி அறிய வேண்டுமென்று சொல்லவில்லையே, தயவு செய்து அதை அறியும் வழியைச் சொல்லுங்கள். அசுரர்கள் என்றாலே, எனக்குக் குளிர் நடுங்குகிறது.

நார:—(சிறிது யோசனை செய்து விட்டு) என்னமோ எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன். உன்குரு பிரகஸ்பதியின் குமாரன் கச்சன்தான் இதற்குச் சரியான பேர்வழி. அவனையே அனுப்பு.

(இந்திரன் கச்சனை அழைத்து வரும்படிக் காவலனை அனுப்புகிறான். கச்சன் வருகிறான்.)

தேவே:—கச்சா! நீ பூலோகம் சென்று சஞ்சீவினி மந்திரத்தை எப்படியாவது அறிந்து வர வேண்டும். உன் தந்தையின் உத்திரவு பெற்றுச்செல்.

கச்சன்:—தேவேந்திரா! உங்கள் ஆக்ஞைப் படியே பூலோகம் சென்று சஞ்சீவினி மந்திரத்தை அறிந்து வருகிறேன், கவலைப் படாதீர்கள்.

(கச்சன் பிரகஸ்பதியிடம் உத்திரவு பெற்று செல்லுகிறான்)

பாகம் 2.

இடம்:—சுக்கிராச்சாரியாரின் பங்களா.
காலம்:—மாலை.

சுக்கிராச்சாரியார் விருஷபர்வாவினால் கொடுக்கப்பட்ட பங்களாவில் அன்று வந்த 'தமிழன்' பத்திரிகையைப் படித்துக் கொண்டிருக்கிறார். சற்று தூரத்தில் அவர் மகள் தேவயானி சோபாவில் சாய்ந்துக் கொண்டு 'நவயுவன்' பத்திரிகையைப் படித்துக் கொண்டிருக்கிறாள். அச்சமயம் வாயில் காப்போன் வந்து சுக்கிராச்சாரியாரிடம் ஒரு விசிடிங் கார்டைக் (Viciting Card) கொடுக்கிறான். அதில் பின் வருமாறு எழுதப் பட்டிருந்தது.

கச்சன் பி.ஏ பெயில் (Failed)
S/o பிரகஸ்பதி
தேவலோகம்.

சுக்கிராச்சாரியார் கச்சனை அழைத்து வரச் சொல்கிறார் கச்சன் வருகிறான்.

கச்சன்:—குட் யீவினிங் ஸார். (Good-evening sir)

சுக்கிரா:—குட் யீவினிங். குட் யீவினிங். வாடாப்பா, வா, உட்கார். ஏது இவ்வளவு தூரம் வந்தாய்.

கச்சன்:—நான் தங்களுக்குப் பணி விடை செய்து சஞ்சீவினி மந்திரத்தை அறிந்து போகவே தேவலோகத்திலிருந்து டைரக்டாய் (direct) இங்கு வருகிறேன்.

சுக்கி:—ஐயையோ! நீ என்னுடைய எனிமியின் (enemy) மகனாயிற்றே. உனக்கு நான் சஞ்சீவினியைக் கற்று கொடுத்தால் அசுரர்கள் என்ன நினைப்பார்கள்.

கச்சன்:—தேவலோகத்தில் வாத்தியார்கள் ஒரு மாதிரி யென்றால் நீங்களுமா இப்படி. சே, சே, சே! நான் போகிறேன்.

கச்சன் எழுந்திருக்கிறான். தேவயானி கவலைப்படுகிறாள்.

தேவயானி:—அப்பா! அவர் வெகு தூரத்திலிருந்து வருவதால் ரொம்ப டயாட்(Tired) டாக இருப்பார், ஆகையால் அவரை இங்கேயே டிபன் சாப்பிட்டுவிட்டு ரெஸ்ட் (rest) எடுத்துக் கொண்டு போகச் சொல்லப்பா.

சுக்கி:—சரி! கச்சா! நீ இங்கேயே டிபன் சாப்பிட்டு விட்டு ரெஸ்ட் எடுத்துக் கொண்டு போடாப்பா.

கச்சன்:—உங்காத்து டிபன் உங்க கிட்டேயே இருக்கட்டும், இந்த ஊரில் ஹோட்டலுக்கா பஞ்சம். நான் ஒரு ஓட்டலுக்குச் சென்று டிபன் சாப்பிட்டுவிட்டுப்போகிறேன். ரொம்ப தாங்ஸ் (thanks).

தேவயானி:—என்னப்பா! அவர் கோபித்து கொண்டிருக்கிறாப் போலே இருக்கே, அவர் போற வேகத்தைப் பார்த்தா. நீங்க பாட்டுக்கு இப்படி உட்கார்ந்திருந்தா உங்களைத்தானே நாலு பேர் தூற்றுவா. கூப்பிடப்பா. அவரை உன் சிஷ்யனா ஏத்துக் கோயேம்பா.

சுக்கி:—கச்சா! ஏன் இவ்வளவு கோபம். வா. நீ என்னுடைய (deeiple) சிஷ்யனாக இருக்கலாம். ஆனால் நான் சொல்லும் பணிவிடைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டும்.

கச்சன்:—ஆகட்டும் ஸ.ர்.

சுக்கி:—சரி! தேவயானி. நான்போய் ஷேவ் (shave) பண்ணிக் கொண்டு வருகிறேன். நீ கச்சனுக்கு வேண்டியவைகளைக் கொடு. (செல்கிறார்.)

தேவயானி:—ஏன் சிலை மாதிரி நிற்கறேள். வாங்களேன். டிபன் சாப்பி..ப் போகலாம். (டிபன் சாப்பிடச் செல்கிறார்கள்)

பாகம் 3

இடம்:—விருஷபர் வாவின்மாளிகை

காலம்:—காலை.

அரசன் விருஷபர்வனும் மற்று முள்ள அசுரர்களும் வீற்றிருக்கிறார்கள். அச்சமயம் நாரதர் அங்கு வர எல்லோரும் நமஸ்காரம் செய்கிறார்கள்.

விருஷ:—என்ன கலகப்பிரியரே! விசேஷமில்லாமல் வரமாட்டீரே. எங்கே இப்படிகிளம்பினேள், (நாரதரின் கையிலிருந்த காமிராவை பார்த்து விட்டு) ஓய்! என்ன இது? கையில் காமிராவுடன் கிளம்பி விட்டீர். நம் அரண்மனையை போட்டோ பிடிக்கவா.

நாரதர்:—போட்டோ கிடக்கட்டும். நான் இப்போது மிகவும் அர்ஜெண்ட் மேட்டருடன் (matter) வந்திருக்கிறேன்.

விருஷ:—அதென்ன? அப்படிப் பட்ட அர்ஜண்ட் மேட்டர்.

நாரதர்:—கேஸ் ரொம்ப ஸீரியஸாப் போச்சு. தேவலோகத்திலிருந்து, சஞ்சீவினி மந்திரத்தைக் கற்றுப் போவதற்காக கச்சன் வந்திருக்கிறான். ஒன்று மட்டும் நினைத்துக் கொள். கச்சன் சஞ்சீவினியை அறிந்தால் உனக்கு ஆபதது தான்.

விருஷ:— நாரதரே! கச்சனைக் கொன்று விட்டால் தேவர்கள் எப்படி சஞ்சீவினியை அறிய முடியும்?

நார:— பேஷ்! பேஷ்! உன் புத்தியே புத்தி. அப்படியே செய், நான் போய் வருகிறேன்.

(நாரதர் போகிறார்)

விருஷ:— டேய்! மடையா, முட்டாள் இப்படி வாங்கடா. (இருவரும் வந்து வணங்குகிறார்கள். அவர்களைப் பார்த்து) டேய்! ஒரு முக்கிய சமாசாரம். நீங்க ரெண்டு பேரும் போய் சுக்கிராச்சாரியார் வீட்டிலிருக்கும் கச்சனை க்ளோஸ் பண்ணிட்டு வந்துடனும் தெரிஞ்சுதா

இருவரும்:— அப்படியே மஹாராஜா.

(போகிறார்கள்)

பாகம் 4

இடம்:— சுக்ராச்சாரியின் பங்களாவுக்குப் பின்னாலிருக்கும் நந்தவனம்.

கச்சனும், தேவயானியும் கண்ணாமூச்சி விளையாடுகிறார்கள். கச்சன் கண்ணைத் திறந்து விட்டு அவளைத் தேடுகிறான். அப்பொழுது அசுரர்கள் இருவரும் அவனைக் கொன்று விடுகிறார்கள். கச்சன் அலறிக் கொண்டே இறந்து விடுகிறான். தேவயானி கச்சனின் அலறலைக் கேட்டு ஓடி வருகிறாள்.

தேவயானி:— ஐயய்யோ! அப்பா! கச்சனை யாரோ அசுரர்கள் கொன்று விட்டார்களே. அவர்கள் நாசமாகப் போக, அவர்கள் தலை

யில் 'ட்ராம்' கம்பி அறுந்து விழ. அப்பா.... அப்பா......

(சுக்ராச்சாரியார் ஓடி வருகிறார்)

சுக்கி:— என்ன! மர்டரா! யார் இப்படிச் செய்தார்.

தேவ:— எல்லாம் உங்கள் சிநேகிதர்கள் அசுரர்கள்தான். இவரை இப்போது உயிர்ப்பிக்காவிடில் நான் Suicide Commit (தற் கொலை) பண்ணிக் கொள்வேன்.

சுக்கி:— தேவயானி! அப்படி யெல்லாம் ஒன்றும் செய்து விடாதே! இதோ கச்சனை உயிர்ப்பிக்கிறேன்.

(தேவயானி உள்ளே போகிறாள்)

(சுக்ராச்சாரியார் சஞ்சீவினி மந்திரத்தை உச்சரித்து கச்சனை எழுப்புகிறார். கச்சன் எழுந்து அவரையும் நமஸ்கரிக்கிறான்.)

கச்சன்:— ரொம்ப தாங்ஸ், உங்களால் தான் நான் பிழைத்தேன்.

சுக்கி:— பரவாயில்லை வா போகலாம்.

(போகிறார்கள்)

(மறைந்திருந்த அசுரர்கள் வெளியில் வருகிறார்கள்.)

முட்டாள்:—என்டா மடையா! ஆசாமியைக் கொலை பண்ணிக்கூட ஒண்ணும் நடக்கல்லியேடா. மகாராஜா முகத்திலே எப்படிடா முழிக்கிறது ?

மடையன்:—போடா முட்டாள்! ஆந்தை மாதிரி முழிக்கிறது. நாம் என்ன செய்யலாம். அந்தப் பொண்ணு சொல்லிச்சுன்னு, அந்தப் பிராமணன் கச்சனைப் பொழைக்க வெச்சுட்டானே.

முட்டாள்:—ஆமாண்டா மடையா! நம்ப நாரதர் கூட அன்னிக்கி மவராஜா கிட்ட, "சுக்கிராச்சாரியாரு சஞ்சீவினி மந்திரத்தை ஒரே ஆசாமிமேலே ஒரு தரத்துக்கு மேலெ பிரயோகிச்சா அவரே செத்துப் பூடுவார்'ன்னுட்டு சொன்னாரே அதனாலே நாம் இன்னொரு தடவை கச்சனை கொன்னு புடலாம்.

மடையன்:—அதாண்டா சரி! ஒம் மூளையே மூளை. (சற்று கவனித்து விட்டு) யாரோ வராப்பலே இருக்கே. வா. ஒளிந்துக்கொள்ளலாம்.

(ஒளிந்து கொள்ளுகிறார்கள்).

கச்சன் வருகிறான். இருவரும் அவனைக் கொன்று விடுகிறார்கள். சுக்கிராச்சாரியாரும் தேவயானியும் வருகிறார்கள்.

தேவயானி:—ஐயோ! அப்பா! மறுபடியும் யாரோ அவரை கொன்று விட்டார்களே. நீங்கள் எப்படியாவது அவரைப் பிழைப்பிக்க வேண்டும்.

சுக்கி:—நான் மற்றொரு முறை மந்திரத்தை அவன் மேலேயே பிரயோகித்தால் நானல்லவோ இறக்க நேரிடும்.

தேவ:—(கொஞ்சம் யோசித்து) எனக்கு ஒன்று தோன்றுகிறதப்பா! நீங்கள் என் எதிரில் சஞ்சீவினி மந்திரத்தை உச்சரித்து அவரைப் பிழைக்க வையுங்கள். நான் சஞ்சீவினியை உபயோகித்து உங்களைப் பிழைக்க வைக்கிறேன்.

சுக்கி:—சரி! தேவயானி! உன் புத்தியே புத்தி. அப்படியே ஆகட்டும்.

(சுக்கிராச்சாரியார் சஞ்சீவினியை உபயோகித்து, கச்சனைஎழுப்பி அவர் இறக்கிறார், தேவயானி அதே சஞ்சீவினியால் அவரை எழுப்புகிறாள்.) தேவயானி சொல்லும் போது கச்சன் கவனித்துக் கொள்கிறான்.

சுக்கி:—கச்சா! தேவயானி! நீங்களிருவரும் காதலிப்பதால் உங்களுக்கு கூடிய சீக்கிரத்தில் மணம் செய்து வைக்கிறேன்.

கச்சன்:—ஸ்வாமி! நான் ஸஞ்சீவினி மந்திரத்தைத் தேவயானியின் உதவியால் கற்றேன் நான் தேவலோகம்சென்று, சஞ்சீவினி மந்திரத்தைத் தேவேந்திரனுக்கு அறிவித்து, என் தந்தையின் உத்தரவு பெற்று வருகிறேன். நமஸ்காரம். சென்று வருகிறேன்.

சுக்கி:—உன் இஷ்டப்படியே செய்! சீக்கிரம் வந்து விடு. ஆசீர்வதிக்கிறார். (கச்சன் போகிறான்.)

சுபம்! சுபம்! சுபம்!

---

ஒவ்வொரு ஆங்கில மாதம் 1, 15 தேதிகளில் வெளி வரும் பத்திரிகை

# நவீன சினிமா நிலையம்

## விலை அணு இரண்டு

| | |
|---|---|
| வருட சந்தா உள் நாடு | 3—0—0 |
| வருட சந்தா வெளி நாடு | 3—8—0 |

விவரங்களுக்கு:

**நவீன சினிமா நிலையம்**

5, கோபால் தாஸ் ரோடு,

மவுண்ட் ரோடு மதருஸ்.

# சினிமா உலக லீலைகள்!

[பரமன்]

——முதல் காட்சி——

(மாருதி புரொடக்ஷனஸ் டைரக்டர், டபுள்யூ. எக்ஸ், அனுமந்த், ஆடும் நாற்காலியில் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறார். 'எக்ஸ்ட்ரா ஸ்டார்' மானேஜர் மிஸ். அம்புஜம், எதிரில் நின்றுக் கொண்டிருக்கிறாள்.

டைரக்டர்:—என்ன அம்புஜம்! நேத்திக்கு சொன்ன விஷயம் என்ன வாச்சு? பீச்சில் பார்த்த அந்த குட்டி விஷயம்......?

அம்புஜம்:—அந்த விஷயம் முடிஞ்சிட்டாப்லே தான் சார். ஆனல், அவளுடைய 'மதர்' ஒரு மாதிரி, அதுக்கு தான் யோசனை செய்கிறேன்.

டைரக்டர்:—இது விஷயத்தில் நீ எப்படியும் முடிச்சுடணும், பிறகு தான் உன்னை நான் தனியா கவனிச்சுக்குவேன், என்ன அம்புஜம்?

அம்புஜம்:—என்னமோ சார்! உங்களைத் தான் நான் நம்பி யிருக்கிறேன். என்னை முன்னுக்கு கொண்டுவர வேண்டியது நீங்கள் தான். என்னை மறக்கப்படாது.

டைரக்டர்:—சே! சே! நான் மறந்து விடுவேனு என்ன! அம்புஜம் காரியத்தில் கண்ணுயிருந்து, சீக்கிறமா முடிச்சுடு, பிறகு....'

அம்புஜம்:—ஆகட்டும் சார், நான் வரேன்........! குட்மார்னிங்.

டைரக்டர்:—குட்மார்னிங்!

(அம்புஜம் வெளியே போகிறுள்)

இரண்டாம் காட்சி

(அம்புஜம் அவசரமாக மயிலாப்பூரில் ஒரு வீட்டில் நுழைகிறுள். வீட்டினுள்ளே ஒரு அறையிலிருந்த ஒரு யுவதியிடம் பேச்சு ஆரம்பிக்கிறுள்).

அம்புஜம்:—நமஸ்தே, மிஸ் குமாரி!
குமாரி:—ஹலோ! நமஸ்தே.

அம்புஜம்:—எங்கே, நேரமாச்சு சீக்கிரம் கிளம்பு, புறப்படணும்! (என்றுள் பதட்டமாக)

குமாரி:—என்ன! இவ்வளவு அவசரம், சமாசாரம் என்ன?.......

அம்புஜம்:—எல்லாம் நல்ல சமாசாரம் தான், சீக்கிரம் கிளம்பு, எல்லாம வழியோடே சொல்றேன்.

குமாரி:—அம்மா வீட்டிலேயே இருக்கா, எங்கே போகிறது, எப்படி முடியும் அம்புஜம்!

அம்புஜம்:—சே! சே! என்ன அசடாய் இருக்கே, அம்மா வாவது ஆட்டுக் குட்டியாவது. எல்லாம் பணமும், புகழும் இருந்தால் தான், சொல்வதைக் கேள், நீ அம்மா மீது ஆசை வச்சிட்டிருந்தா சினிமா நட்சத்திரமாக வர முடியாது, எல்லாத்தையும் தொலைச்சுட்டு வெளியே வந்துட்டா அதன் 'ஜாலி'யே வேறு தினுசுதான் நான் மட்டும் என்ன, உன்னைப் போல குடும்பப் பெண் தான். என் வீட்டுக்காரர் கல்கத்தாவில் பெரிய டைரக்டராக இருந்து வருகிறுர். எனக்கென்னமோ அந்த ஊர் பிடிக்கவில்லை. எப்பொழுதும் கொலை, கொள்ளை, திருடு, திகைப்புத் தான். பகல் நேரத்திலேயே பெண்களை இழுத்துண்டுப் போருளாம் அதனுலே தான் அங்கே இருக்க எனக்கு பிடிக்கவில்லை. தினம் தினம், தந்தி, தந்தியாக என் வீட்டுக்காரர் எழுதிண்டிருக்கார், வரச்சொல்லி, நமக்கெதற்கு அந்த ஊரெல்லாம், இங்கேயே ஹாயாக இருக்கும் போது, சரி, சரி,........பேச்சு ஸ்வாரஸ்யத்தில் நேரமே தெரியவில்லை டைரக்டர் சார் நமக்காக காத்திருப்பார். ஸ்டைலா சிங்காரிச்சுண்டு புறப்படு......?'


குமாரி:—விஷயத்தை விளக்கச் சொல்லு, நானும் அதற்குள்ளே முகம் கழுவி, புடவை மாற்றி விடுகிறேன்.

அம்புஜம்:—விஷயம் என்ன! நீ தான் தினமும் என்னிடம் சொல்லிண்டிருந்தாயே, சினிமாவிலே நடிக்கணும், பேரும் புகழும் சம்பாதிக்கணும், மோட்டாரிலே போகணும், பத்திரிகைகளெல்லாம் புகழ்ந்து எழுதனும், என்று இப்படி ஆசைப்பட்டாயே அதுக்குத் தான் நல்ல காலம் வந்து விட்டது. டைரக்டர்சார் பீச்சிலே உன்னைக் கண்டதும் சொக்கி விட்டாராம்.



தயாராகிறது
துர்காவின்
ஜீவரத்னம்
தமிழ்
(சமூகப்படம்)
நடிகர்கள்:
M.N. வரதராஜன்
T.R. மைதிலி
கீதா ரமணி
ரஷீத்
பேபி பிரேமா
H. சீனிவாசராவ்
A.A. கரீம் (கலாய்)
முதலியோர்
டைரக்ஷன: K.R.S. ராவ்
பாடல்கள்: திலகம்
DURGA
PICTURES
விவரங்களுக்கு:
துர்கா பிக்சர்ஸ்
திருச்சி.

# நாடெங்கும் போற்றுதடி!



(T.G. கல்யாணரமணீகரன்)

**இராக மாலிகை.** **ஆதி**

**கண்ணிகள்.**

1. வண்ணமிகும் வடிவாய் கன்னியே
வந்த நல் காக்ஷியடி எந்தன்
எண்ணமென் சொல் வேனடி கன்னியே
எங்கும் ப்ரகாசமடி

2. நல்லதொரு நாதமடி கன்னியே
நலம் பெற வாச்சுதடி அதனை
சொல்ல சொல்ல சுகமினிதே கன்னியே
சூழ்ந்து வந்தே நிற்குதடி

3 அன்னையினும் பரிவுடையோன் கன்னியே
அருளையும் பெற்றேனடி அங்கே
என்னையும் அறியாமலே கன்னியே
ஏகதலை நாகமடி

4 அஞ்சுதலை படமெடுத்தே கன்னியே
அழைத் தோடிச் சென்றதடி அதனால்
அஞ்சுதலை விடுத் தேனடி கன்னியே
ஆறு தலடைந் தேனடி

5 ஆனந்த நாடகமாம் கன்னியே
ஆடிப்பாடி மகிழ்வனடி அவனால்
நானந்த மயமானேன் கன்னியே
நாடெங்கும் போற்றுதடி

# மொழி பெயர்ப்பு படங்கள் தேவை!

[ப. தனுஷ்கோடி]



[நண்பர் திரு. ப. தனுஷ்கோடி, நம் தமிழ்ப் படஉலகில் மொழி பெயர்ப்பு படங்கள் அவஸ்யம் தேவை என்று ஆதார பூர்வமாக—அழகாக விளக்கி யுள்ளார் இக்கட்டுரையில். இதைப் பட முதலாளிகள் ஏற்றுக் கொள்வார்களா ?...—ஆசிரியர்.]

இந்தி மொழி எனக்குத் தெரியாது. அம்மொழி பேசுபவர்களின் இடையிலும் நான் வசிக்கவில்லை. ஒன்றிரண்டு ஸ்டண்ட் படங்களைத்தவிர, இந்திப் படங்கள் எதுவும் எங்களூருக்கு வருவதில்லை. ஆகவே அவைகளை உணர்ந்து புரிந்து கொள்ள என்னால் முடியாது இருப்பினும் சென்னை, திருச்சி, பெங்களூர் போன்ற இடங்களில் பல வாரங்கள் இந்திப் படங்கள் ஓடுகின்றன என்று கேள்விப் படும் போதும், இந்திப் படங்களின் உயர்தரம் பற்றிய விமர்சனங்களைப் படிக்கும் போதும் உள்ளத்திலே புல்லரிப்பு தோன்றுகிறது. இந்தி தெரியாத எண்ணற்ற தமிழர்களால் அதைக்கண்டு ரஸிக்க முடிகிறது; அனுபவிக்கிறார்கள் என்று அறியும் போது ஆசை கொழுந்து விடுகிறது.

“லைலாமஜ்னு” படிப்பதை விட பார்ப்பது உள்ளத்தை உருக்குகிறது என்று பார்த்தவர்கள் கூறும் போது மனம் நமக்கும் பதைக்கிறது. “கர்க்கி ராணி”யைக் கண்டவர்கள் கதையின் சுவாரஸ்யத்தைக் கண்டிப்பாகப் புரிந்து கொள்ளுகிறார்கள். கலையார்வம் கொண்ட எவரும் “நயா ஸன்ஸார்” கதாநாயகனை மறக்கவே முடியாது. “உமர் கயாமு”ம் “ஏக் தின் கா சுல்தா”னும் ஒப்பற்ற சரித்திர உணர்ச்சிகளை ஊட்டக் கூடியவை. “அன்மல் கடி” சிறு சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டு எழுந்த அன்புச் சித்திரம்! எங்காவது வெளியூர் பிரயாணம் ஏற்படும் சமயத்தில் காணக்கிடைத்த சந்தர்ப்பங்களைக் கொண்டு மேற்படி பெயர்களைக் குறித்திருக்கிறேன். இன்னும் இதைவிட அருமையான பல படங்கள் தமிழ் மக்களிடையே அளவற்ற ஆதரவுடன் காண்பிக்கப் பட்டுத் தான் வருகின்றன. இவைகள் வெறும் வடநாட்டுப் படையெடுப்பு என்றோ, தமிழர் பணத்தைச் சுரண்டும் மோசடி என்றோ, சுலபமாகக் கூறி விடமுடியாது. கலையைச் சரியானபடி கையாண்டு, அதற்குரிய விலையைப் பெறுகிறார்கள். “அடிமையின் காதல்,” “மறைந்த அடிவானம்” போன்ற ஆங்கிலப் படங்களும் இம் மதிப்புக் குரியவைகளே!

தமிழன் தனி இனம்; தமிழ்க்கலை தனிப் பெருமை வாய்ந்தது; என்று எதை வேண்டுமாயினும் கூறிக்கொள்ளலாம். ஆனால் அதற்காகப் பிறமொழிப் படங்களை நாம் உதாசீனம் செய்யவேண்டியதில்லை. உண்மையை மறுக்காமல் கௌரவிப்பது கண்ணியமானவர்களின் அழகு, ‘பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்; தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்!” என்று பாரதியார் கூறியிருக்கிறார். தன்னைத் தாழ்த்திப் பிறரை உயர்த்த வேண்டும் என்பதல்ல இதன் நோக்கம்! அவரவர் பண்பில் தான் அவரவர் திறமையைக் காட்டி உயர்வடைய முடியும். பிறர் உணர்ச்சிகளை-கலைகளை நாம் பூரணமாக நிறை வேற்றி வைக்க முடியாது. அதை மூலத்திலேயே கண்டு அனுபவிக்க வேண்டும். அது சாத்தியமில்லாதவர்கட்கு அறிஞர்கள் மொழி பெயர்த்து வழங்கல் வேண்டும்.

காண்டேகர், சரத்சந்திரர், தாகூர் போன்றவர்களின் எத்தனையோ கதைகள், நாவல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படவில்லையா? அதை மக்கள் விரும்பி சுவைக்கவில்லையா? அவை எல்லாம் குற்றம் என்று கூற முடிகிறது? பழக்க வழக்க கலாச்சாரங்களில் அவை நம்மை விட்டு சற்று வேறு பட்டாலும், படித்து அனுபவிக்க முடிகிறதே! எத்தனை அயல் நாட்டு நாவல்கள் தமிழில் குவிந்துள்ளன? அதனாலெல்லாம் தமிழ் குன்றி விடுகிறதா? இல்லையே! அப்படியானால் உயர்ந்த இந்திப் படங்களையும் ஏன் எல்லோரும் இதைச் சரியாகப் பயன் பெறும்படிச் செய்யக் கூடாது?

நான் சொல்வது கன்னட ஹரிச்சந்திராவைத் தமிழாக்கியது போலல்ல. இந்தி ராம்ராஜ்யாவை தமிழ்ப் படுத்துவது போலுமல்ல. மக்கள் ஆதரவைப் பெறும் ஒவ்வொரு நல்ல படத்தின் ஸீனரியோவையும் அப்படியே விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட டைரக்டர், நடிக, நடிகையர், முக்கியஸ்தர்களிடம் படம் பிடிக்கப்படும் போது ஏற்பட்ட அனுபவத்தையும் குறித்துக் கொள்ள வேண்டும். பின்னர் தமிழ் மரபு குன்றாமல் அவைகளைச் சீர்திருத்திக் கொண்டு, தக்க நடிகர்களை அமர்த்தி, சம்பவ மாற்றம் ஏற்படாமல் தமிழ் ஸ்டுடியோவில் தயாரிக்க வேண்டும். இந்தி மெட்டுகளையும், நடனங்களையும் திருட்டுத்தனமாகக் காப்பியடிப்பதை விட, நேரடியாக உரிமை பெற்று பகிரங்கமாகக்கூறி தமிழுக்குப் பிற இலக்கிய சிருஷ்டிகளைக் கொண்டு வருவது நிறைந்த பெருமையைக் கொடுக்கும். அச்சமின்றி, கூச்சமின்றித் தயாரிக்கும் படங்களே, சிறந்த படங்களாக வெற்றியைத்தர முடியும். ஆனால் கதாசிரியருக்குப் பணம் கொடுத்துப் பழக்கமில்லாத தமிழ்ப் பட முதலாளிகள், வெறும் ஸீனரியோ டைலாக்கு உரிமைக்காகப் பணம் செலவழிப்பார்களா? அவ்வளவு தைரியம் துணிவு ஏற்படுமா? மனம் இசையுமா?

பெருவாரியான ஆதரவைப் பெற்று பலவாரங்கள் ஓடும் தமிழ்ப் படங்கள் ஒவ்வொன்றும் எல்லா விஷயங்களிலும் மேன்மை பெற்று இருப்பதில்லை. ஒன்று பாட்டினால் பிரபலமடையும்; மற்றொன்று வசனத்தினால் பெயர் பெறும்; பிறிதொன்று சிறந்த நடிப்பினால் உயர்வடையும். தேசபக்தியினால்—பாரதி பாட்டினால் பேர் வாங்கிய "நாம் இருவர்" படத்தைப் பாராட்டாத பத்திரிகைகள் இல்லை. படம் பார்ப்பவரைப் போலவே, படம் பிடித்தவர்களும் பூரித்துப் போனார்கள். ஒப்பற்ற முறையில் ஒரு முகமாகப் புகழும் அதைக் கூட சில கையெழுத்துப் பத்திரிகைகள் மகா மோசமாகத் தாக்கி எழுதியுள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா? கையெழுத்துப் பத்திரிகைகள் எல்லோரிடமும் பரவ முடியாது. அதன் ஆசிரியர்கள் யாருடைய விருப்பு வெறுப்பை எண்ணியும் எழுத வேண்டுவதில்லை. அப்படியானால் பாரபட்சமற்ற அந்த இடத்தில், மற்றவர்களை விட வேறுவிதமாக ஏன் ரஸிக உணர்ச்சி மாற்றமடைகிறது? சிந்திக்க வேண்டும். மற்றவைகளை மதிக்காமல் தேசியம் ஒன்றையே சுய நலமாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்ச்சி சந்தேகம் அவர்கள் மனதில் எழுந்து விட்டது. படம் பிடித்தவர்கள் இப்படி பிறர் நினைக்க இடம் கொடுத்திருக்கலாகாது.

வட இந்தியப் படங்கள் எத்தனையோ கழிசடைகளாகப் போனாலும், எங்கும் பரவி சிறந்த ஆதரவைப் பெறும் சில படங்களையேனும் உடனுக்குடன் தமிழாக்க முனைதல் வேண்டும். திரும்பத் திரும்ப போட்டிக் கதைகளையும், புராணக் கதைகளையும் எடுத்து காசு நஷ்டம், அறிவு நஷ்டம் அடையக் கூடாது. உயர்வான கருத்துக்களை உணர்ச்சி ததும்ப உருக்கமாக வெளிப்படுத்தும் ஆற்றல் வாய்ந்துள்ளன இந்திப் படங்களில்! அவை ரஸம் குன்றாமல் தமிழாகவே கொண்டுவர முடிந்தால் தமிழர்கள் மேலும் பாக்கியசாலிகளாவார்கள்! பாஷை, எல்லை முதலிய குறுகிய பிரச்சினைகள் படவானில் என்றுமே பிரவேசிக்க வேண்டாம். சிறந்த மொழி பெயர்ப்புப் படங்கள் வருடத்திற்கு ஐந்தாவது தமிழில் வந்து சேரட்டும். முக்கி முக்கி முன்னேறாத தமிழ்ப் படங்களும் அதன் வாடைபட்டு கொஞ்சம் மலரட்டும்! அப்பொழுதாவது தமிழ்ப்பட உலகம் முன்னேற்றப் பாதையில் முன்னேறும். இதைச் சற்று தமிழ்ப் பட முதலாளிகளும், டைரக்டர்களும் யோசிக்கட்டும்.

உங்கள் தேவைக்கு!

அவசியம் வாருங்கள்!

**விளம்பர போர்டுகள்**

அழகிய பல விதங்களில்

தாயர் செய்யு மிடம்'

**ஜோதி பெயின்டிங்**

**ஒர்க்ஸ்**

**சேலம் டவுன்**

# என் பிரார்த்தனை

[கலாம்ருதம்]

சென்ற 14-9-47 ஞாயிறு மாலை எழும்பூர் மியூசியம் தியேட்டருக்கு, பந்தனல்லூர் பெரியார் திரு. சொக்கலிங்கம் பிள்ளை என்னை அழைத்துச் சென்றது என் பூர்வீக பாக்கியம் போலும்.



[ஜி. கௌசல்யா]

எள் விழ இடமில்லாத ஓர் பிரம்மாண்டமான சபையின் முன், இந்திர லோகத்து 'ஊர்வசி'யைப் போல ஒரு அழகிய அணங்கு (கௌசல்யா) மின்னல் போல் தோன்றி, பந்தனல்லூர் பந்தா பரத நாட்டிய மாடி, அனைவர் உள்ளத்தையும், ஆனந்த சாகரத்தில் மூழ்கடித்து மெய் மறக்கச் செய்தார்.

மான் குட்டியைப் போல், ரொம்ப சுட்டிகையாகவும், சுறு சுறுப்பாகவும், லாவகமாகவும் சலிக்காமல், ஆடியது பாராட்டத்தக்கதாகும்!

கௌசல்யா தேவியின் திரேக கட்டும் நாட்டியத்திற்கேற்றவாறு உருக்கப்பட்டிருக்கிறது.

முகபாவம், கண்வீச்சு, அங்கவளைவு, காலடி பந்தா, தாளக்கட்டு, நிர்ணயம் ஆகியவைகளில் கௌசல்யா தேவிக்கு நிகர் அவளே தான்.

அன்றைய நிகழ்ச்சியில், கௌசல்யா செய்து காட்டிய அபிநயங்களையும், அடவு கோர்வைகளையும், ஜதி—தீர்மானங்களையும் கண்ட கலாரசிகர்கள் பிரமித்துக் கை கொட்டிக் கரகோஷம் செய்தனர்.

நடன குருதேவர், ஸ்ரீமான் சொக்கலிங்கம் பிள்ளைக்கும், 'இன்டியன் இன்ஸ்டிட்டியூட் ஆப் பைன் ஆர்ட்ஸ்''க்கும் நற்பெயரும், புகழும் வாங்கித் தந்தார் நடனமணி கௌசல்யா. கௌசல்யா தேவி இன்னும் மேன் மேலும், நாட்டியக் கலைத் தொண்டு செய்து, நம் சுதந்திர பாரத தேசம் புகழும்படி நடன கலாமணியாகப் பிரகாசிக்க கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

# காதலில் உதித்த வாரம்

(டாக்டர் S. A. சஞ்சீவி)

(கும்மி இசை)

நீலத்திரைக்கட லோரத்திலே அங்கு
நின்று மணல்பரப்பில் காண்கையிலே
மேற்கு மாமலை கோடியிலே அன்று
மாபெரும் ஞாயிறு தூங்கையிலே

வாலைப்பதினாறு வய தென்றல் போல் ஒரு
வாலிப பெண்ணொன்று வரக் கண்டேன்
சோலை மாருதம் அவள் புன்னகையும்
எழில்
சுந்திரத் திங்கள் அவள் முக வெழிலும்

கரியமேக சீர் கூந்தலுடையாள் நல்
கரு வண்டென கண்ணுடையாள்
அர்சுன்னன் வில்லென புருவங்களும் நல்
அழகிய செவ்வாய் முறுவல் கொண்டாள்

உற்று நோக்கிப் பின் என்னுருவைக் கண்டு
உள்ளத்தில் கனிந்த உவகைக் கொண்டு
சற்றும் நகராமல் எதிரே நின்று
சங்கோஜ அன்புதன் பார்வை கொண்டாள்

பெண்கள் நாயகமே! மாதரசே யென்தன்
பேரி லுனக் கென்ன மோடி யென்றேன்
சுந்திர புன்னகை பூத்தவளிதழ்
சுந்திரா! தலை வியாழன் னென்றுரைத்தாள்.

அன்பை யள்ளிப்பருகும் அன்னப்பேடே
யென்தன்
அந்தா கூட்டினில் மாட்டிக் கொண்டாய்
வீணில் நமக்குள் வாதுகள் வேண்டாம்
விடி வெள்ளியறிய உன்னை விடேன்.

காதல் கனல் கொண்ட கட்டழகன் தன்
கைகளை விரித்து தாவி நிற்க
ஆவல் மிகுந்த ஆரணங்கு வதில்
ஆலிங் கனச் சனியால் யொட்டி நின்றாள்.

# வாழ்க வையகம்

[பம்பாய்-நிருத்யசம்ராட் கோபாலகிருஷ்ணு]

"நான் மட்டும் வெளியி லிருந்து என்னைப் போன்ற ஒரு நடிகன் மட்டும் கைதியாகி சிறையினில் அடைக்கப்பட்டால் அவனை விடுவிக்க நான் எம்மாதிரி உழைப்பேன் என்பதை உங்களுக்குக் காட்ட வாய்ப்பில்லாது போய் விட்டதே என்று நான் வருந்துகிறேன். வாழ்க்கை என்பது துக்கமும், சந்தோஷமும் கலந்ததொரு சக்தி"

என்ன கம்பீரமான பேச்சு!

யார் சொன்னது தெரியுமா?

ஜுபிடர் பிக்சர்ஸில் நடந்த வரவேற்பு வைபவத்தில் நகைச்சுவை உலகத்தின் ஒரே ஒரு மன்னன், திரு. கிருஷ்ணன் கூறிய பொன் மொழிகள்!

திரு. அண்ணாத்துரை, சிறை சென்ற கிருஷ்ணன் ஒரு சிறந்த பேச்சாளராக வெளி வந்துள்ளார் என்றார்.

தமிழ் நாட்டில் மூலைமுடுக்குகளில் எல்லாம் இன்று பாகவதர்—கிருஷ்ணன் விடுதலை பாராட்டு வைபவம் நடைபெறுகிறது-வரவேற்பு வைபவமும் நடைபெறுகிறது.

சென்ற சில நீண்ட மாதங்களுக்கு முன்பு ஒரு நபர் கொலை செய்யப்பட்டார். கலை உலகம் போற்றிய பாகவதர்-கிருஷ்ணன் கைது செய்யப்பட்டனர். நமது அன்பிற்குப் பாத்திரமானவர்களைச் சட்டம் அம்மரவோ, அல்லது தடித்தகருப்புக்கண்ணாடிபோட்டுக் கொண்டோ அவர்களைக் குற்றவாளிகள் என முடிவு செய்தது! எழுந்தது பொது ஜனங்களின்—கலை அன்பர்களின்—குரல்.

"என்றும் வெற்றி உண்மைக்குத்தான் பொது ஜனங்களுக்குத் தான்" என்றதொரு நிலை வெற்றி யடைந்தது.

இதோ நம்மிடையே பாகவதர்-கிருஷ்ணன். நம் கலை சிற்பிகள் இசை ஒருபோதம். ஆனால் அது லாகிரி அல்ல. பருகப் பருகப் பசித்துப் பருகுவோம். இது நம் நாட்டு மக்களின் தொன்று தொட்ட தொரு பழக்கம்.



இந்த இசையிலே இன்று நம்மிடம் பிறந்த புதுமை பாகவதர் அவரது வாழ்வை நிர்மூலமாக்க இருந்த விதி வீழ்ந்தது-வெற்றி அடைந்தார் பாகவதர்....ஏன்...நாமும் தான்!

நகைச் சுவை நம் பேச்சோடு ஒட்டிய ஒரு அழகு. அதன் அரசன் கிருஷ்ணன் அவர்கள். நகைச்சுவையுடன் புதுமை புரட்சியைசேர்த்து தருபவர் அவர். அவரை நாம் வெளியிலே கொணர்ந்து விட்டோம்.

பொதுமக்களின் அன்பிற்குப் பாத்திரமான நம் திரு... பாகவதர்-கிருஷ்ணன். அவர்களைச் சட்டம் அன்று அவமதித்தது, அதேசட்டம் இன்று அவர்களை மீண்டும் கௌரவித்தது. கலைக்கும், கலைஞர்களுக்கும் நாட்டில் என்றும் ஒரு உயரிய கௌரவம் உண்டு.

இனி கலைப்பொக்கிஷங்களாகிய, திரு. பாகவதர்க்கும், திரு கிருஷ்ணனுக்கும் ஒரு வேண்டுகோள். சென்ற காலத்தில் செய்தது போல வருங்காலத்தில் மக்கட்கு பன்மடங்கு கலை சேவை செய்து மகிழ்விக்க வேண்டும்.

கலைஞன் கை ஒடிய விட மாட்டோம் என்று கர்ஜித்த பொதுஜனங்களுக்கு எனது வாழ்த்து. இதற்கு முன், பாகவதர் கிருஷ்ணன் விடுதலை மலரை, சிரமத்தைச் சற்றும் பொருட்படுத்தாது, மிகச் சிறந்த முறையில் வெற்றியுடன் கொணர்ந்த, நவீன சினிமா நிலையத்திற்கு எனது நல் வாழ்த்துக்கள் பல.! வாழ்க கலை-! வாழ்க கலைஞர்கள் -! வாழ்க வையகம்.!!

# புனர் ஜென்மம் : [கோபால கிருஷ்ணன்

'பொழுது விடிந்தால் தீபாவளிப் பண்டிகை. குழந்தைக்கு வேண்டிய துணிகளும், பண்டிகைக்கு வேண்டிய சாமான்களும் வாங்கி வா' என்றுதனது கையிலிருந்த சிறியபணத் தொகையைத் தன் கணவனான பொன்னனிடம் கொடுத்தாள் வள்ளி.

பொன்னன் ஓர் பெருங் குடியன். கையில் பணம் உண்டானால் கள்ளுக் கடைக்குச் சென்று மிதமிஞ்சிக் குடிப்பான். மதியிழந்து பாதையிலும் சாக்கடையிலும் விழுந்து உருண்டு கிடப்பான். இதைக் கண்ணுறும் ஜனங்கள் நகையாடினர். குடித்துக் குடித்தே தன் சிறிய சொத்தையும் இழந்தான். கையில் காசு வரண்டது. அதனால் குடியை விட வேண்டி நேர்ந்தது. அவன் மனைவியோ கூலி வேலை செய்து அதனால் வரும் சொற்ப வரும்படியைக் கொண்டு தனது அற்ப ஜீவனத்தை நடத்தி வந்தாள். சாப்பாட்டிற்கு அவளைத் தவிர வேறு விதியில்லாததால் அவள் சொற்படி நடந்து வந்தான் பொன்னன்.

கையில் பணத்துடன் சந்தைக்குச் செல்லும் பொன்னன் கள்ளுக் கடையைக் கடக்க வேண்டியிருந்தது. கடையைக் கண்ணுற்றான். பணத்தைக் குடியில் செலவழித்து விட்டால் மனைவியின் திட்டுகளுக்கு ஆளாக வேண்டுமே யென்று ஒரு கணம் பயந்தான். கள்ளின் வாசனை அவனைத் தூண்டிற்று. அத்தூண்டுதலை அவனைக் கடைக்குள் அழைத்துச் சென்றது. அங்கு தன் சகாக்களைக் கண்டான். ஆனந்தங் கொண்டான். முதலில் சிறிது குடித்தான். ஆனால் அது அவனைத் திருப்தி செய்த பாடில்லை மேன் மேலும் குடிக்க ஆரம்பித்தான். கையிலுள்ள காசு செலவாயிற்று. கடையி லிருந்து போத மிகுதியால் தள்ளாடிக் கொண்டு வெளிக் கிளம்பினான். அவனது அங்கங்கள் ஆடின. கால்கள் ஒன்றோடொன்று பின்னின. பாதையில் குறுக்கும் நெடுக்குமாகத் தள்ளாடித் தள்ளாடிப் போய்க் கொண்டிருந்தான். அவன் வாய் ஏதோ முணுமுணுத்தது.

"பாரெங்கிலும் வீசும் மணம்
பாட்டில் அணா மூணா பணம்"

என்று தான் பருகிய அமிர்தத்தைப் பற்றி ஏதோ பாட்டாக பாடிக்கொண்டே சென்றான். அதிகம் குடித்திருந்ததினால் அறிவிழந்தான். கால்கள் ஆய்ந் தோய்ந்து போயின; கண்கள் இருண்டன. அவனால் நடக்க முடிய வில்லை. 'தொப்' என்ற சப்தம். மறுகணம் அவன் பாதையில் விழுந்து கிடந்தான்.

* * *

"பாவாடை" "பாவாடை" என்று பதறி யழுத வண்ணம் புரண்டு கொண்டிருந்த பார்வதி யென்ற தன் ஐந்து வயது நிரம்பப்பெற்ற பெண் குழந்தையை சமாதானம் செய்து கொட்டிருந்தாள் வள்ளி. அவள் பொன்னன் வருகையை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் சென்றது. பொன்னனுக்கு மயக்கம் தெளிந்தும் தெளியாமலு மிருந்தது. பாதையில் விழுந்து கிடப்பதை உணர்ந்தான். மனைவி 'சந்தைக்குப் போய் விட்டு வா' என்று சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. ஆனால் அவள் கொடுத்த பணமோ குடியில் செலவழிந்து விட்டது. சிறிது யோசித்து ஒருமுடிவுக்கு வந்தான் தன்னையு மறந்து தன் கால்கள் சென்ற வழியே செல்லலானான்.

சமீபத்தில் பெரிய இரைச்சல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். சந்தையின் சமீபம் தான் வந்திருப்பதைத் தெரிந்தான். எங்கும் ஜனக்கூட்டம். துணிக்கடைகள் பல விருந்தன. ஒவ்வொரு கடையிலும் மக்கள் தங்களுக்கு வேண்டிய துணிகளை ஆவலோடு வாங்கிக் கெண்டிருந்தனர்.

பொன்னன் மெதுவாக கும்பலுக்குள் நுழைந்தான். அவன் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. தானும் ஓர் துணிக்கடையின் முன் நின்று துணிகளைப் பார்ப்பவன் போல் சிறிது நேரம் நின்றிருந்தான். வேஷ்டிகள், பாவடைகள், சொக்காய்கள் முதலியன பல ரகங்களில் அழகாக வைக்கப்பட்டிருந்தன. கடைக்காரனோ வியாபாரத்தில் முனைந்திருந்தான். அவன் ஏமாந்திருந்த சமயம் சட்டையை மறைத்துவைத்துக்கொண்டான் பொன்னன். ஐயோபாவம்! கடைக்குக்காவலாக, தூரத்தில்


ஒருவன் நின்றுகொண்டிருப்பதை அவன் கவனிக்கவில்லை.

யாரோ ஒருவன் தன் கடையிலிருந்து துணியைத் திருடினவுடனே அவன் 'திருடன் திருடன்' என்று கூவித் தன் தடியை ஓங்கிய வண்ணம் பொன்னனிருக்கு மிடம் வந்தான். பொன்னனால் தப்ப முடியவில்லை. அவனைப் பிடித்து அக்கடைக் காவற்காரன் நன்றாக அடித்தான். அடி பலமாயிருந்ததாலும், குடியின் போதை அதிகமாயிருந்தாலும் பொன்னன் வெட்டுண்ட மரம் போல் கீழே சாய்ந்தான். துரதிர்ஷ்டவசமாக பக்கத்திலிருந்த ஓர் பாராங்கல்லின் மேல் அவன் தலை பட்டது. மண்டையில் பெருத்த காயம் பட்டதினால் மூர்ச்சையாகிக் கிடந்தான்.

தான் எதிர் பாராத விதமாய் நடந்து விட்டதைக் கண்ட அக்காவலால் திகைப்புற்றான். இடத்தைச் சுற்றி கும்பல் கூடிவிட்டது ஆனால் ஒருவராலும் பொன்னன் யார் என்று அறிய முடியவில்லை. பிறகு அவனை மூன்று மைலுக்கப்பாலுள்ள ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றான் அக்காவற்காரன். பொன்னன் வருவான் வருவான் என்றெண்ணி அ வரவை ஆவலோடு எதிர்ப் பார்த்துக் கொ டிருந்தாள் வள்ளி. குழந்தை நெடுநேரம் அழுததால் சோர்வுற்று தூங்கிக் கொண்டிருந்தது. வள்ளி வெளியே வருவதும் உள்ளே செல்வதுமாக விருந்து தன் கணவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் ஓர் வாலிபன் குடிசையை நோக்கி விரைக்க ஓடி வருவதைக் கண்டாள். திகைப்புற்றாள். தன் கணவனுக்கு என்ன ஆபத்து நேர்ந்து விட்டதோ என்று பயந்தாள். அச்சத்தால் அவனது அங்கங்கள் நடுங்கின. அவ்வாலிபன் நடந்த விவரத்தைக் கூறினான். பாவம் என்ன செய்வாள் பேதை: அன்று இருட்டி விட்டதால் ஆஸ்பத்திரிக்குச் செல்ல முடியவில்லை.


மறுநாள் காலை தன் மகளுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்று, பொன்னன் அறிவிழந்து கிடப்பதைக் கண்டாள். டாக்டர் அவன் மிதமிஞ்சிக் குடித்ததினால் போதை அதிகமாயிருக்கிறதென்றும் தலையில் பலத்த காயப் பட்டிருப்பதினால் பிழைப்பது கடினம் என்றும் கூறிவிட்டார். இம்மொழிகள் பொன்னனின் காதுகளில் விழுந்தன.

சுதந்திர தீபாவளியில்
உங்கள் அனைவருக்கும்
எங்கள் நல் வாழ்த்துக்கள்!




நேரு பாக்குத்தூள் கம்பெனி, காரைக்குடி

# என்றைக்கு சிவ கிருபை வருமோ!



[வி. எஸ். மணி]

சினிமா பிரபந்த ரசிகர்கள், பத்திரிகை அன்பர்கள் யாவரும் தலைப்பைக் கண்டதும் ஏதடா, இந்த மனிதன் இந்த ‘47ம் ஆண்டிலும், அதிலும், நாஸ்த்திகர்கள் என்றபட்டப் பெயரைச் சூட்டி ஆஸ்த்திகர்கள் என்று தம்மைத்தாமே சொல்லிக் கொண்டு முன்னவர்களை இழிவு படு பல்லவி பாடிவரும் ஒரு சில ஆஷாடபூதிகளின் கொட்டங்களை அடக்கி வரும் இக்காலில், ‘என்றைக்கு சிவகிருபை வருமோ! என சிந்திக்கிறானே, கலங்குகிறானே, தவம் கிடக்கிறானே என எண்ணலாம். ஆனால் நான் உங்கள் போக்கு கொண்டு இக்கட்டுரையை எழுத முன்வர வில்லை. எனவே ரசிகர்களை முழுதும் படித்துப் பார்த்து ரசிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்று ஏட்டளவில் எழுதி வைத்த ஆதாரப்படி பகாசூரனைக் கொன்று அதன் பின் அவனின் உறவை அறிந்து அவன் விருப்பப்படி அவனின் நினைவுக் கென மங்களத் திருநாளாக கொண்டாடி வரப்படும் நன்னாள். மக்கள் யாவரும் மங்கள நீராடி புத்தாடை அணிந்து புதுமத்தைதுடன் திகழும் புது நாளான இந் நாளில் நமது “நவீன சினிமா நிலையம் தீபாவளி மலர்” உங்கள் ஒவ்வொரு அன்பர்கள் கைகளிலும் காட்சி யுருவதில் ஆச்சர்ய மொன்று மில்லை! எனவே எனது கோரிக்கையும், வாழும் ரசிகர்களாகிய உங்கள் மனதில் நன்குபதிவதுடன் உங்கள் அருளும் கிட்டு மெனவே நம்புகிறேன்.

சலனப்படம் நம்மிடையே தோன்றி சுமார் 20, 22 ஆண்டுகளாகியும் கலைச் செல்வங்களில், கலைபண்பில், கலை அபிவிருத்தியில் மிளிர்ந்து கிடந்து வந்த நம்நாடு, இன்று ஒரு வகையிலும் முனனணியில் இல்லாதது கண்டு வருந்தாமலிருக்க எந்த தமிழ் மகனும் துணிய மாட்டான்.

பண்டைய கால நாகரிக பண்புக்கும், இன்றைய நாகரிக போக்குக்கும், சிந்தனை அளவிலும் ஒருவகை சான்றோ மேற்கோளோ, காட்டவோ, எடுத்துக் கூறவோ, சாத்திய முராது. மேலும், இன்றுநம் நாட்டாட்சியும், மக்களின் போக்கும் மேல் நாட்டாரின் முழு நாகரிகப் பாங்கை தழுவியே நடந்து வருகிறது. ஆயினும் எது தான் மானத்தையும்,


ஸ்ரீ தேவி பால ஷண்முக

## ஜோதிஷ பிரஸாத்

| | | | |
|---|---|---|---|
| எதிர்கால பலன் மாதத்திற்கு | 0 | 4 | 0 |
| ஷை கேள்வி 1க்கு | 0 | 3 | 0 |
| ஷை ,, 2க்கு | 0 | 5 | 0 |
| ஷை ,, 3க்கு | 0 | 7 | 0 |
| ஜாதகம் கணிக்க | 0 | 9 | 0 |
| ஷை தற்கால பலன்கள் | 0 | 2 | 0 |
| வாரபலன் 1 மாதந்திற்கு | 1 | 0 | 0 |
| தினபலன் மாதத்திற்கு | 2 | 0 | 0 |
| மாதபலன் வருஷத்திற்கு | 3 | 0 | 0 |
| வார பலன் வருஷதிற்கு | 9 | 0 | 0 |

மேலும் அரிய விரும்புவோர் எழுதவும்

ஜோஸியர் K. S. கன்னைய ராஜு,

பெயிண்டர், 11-171 ராஜு வீதி

தவுல்தாபாத், கிருஷ்ணகிரி.

தன் கௌரவத்தையும் காக்குமோ! அது வகையில் மக்கள் சிறத்தையுற்றதாகவே தெரியவில்லை. ஆனால் நம் முன்னவர்களாகிய சரித்திரப் பெரியார்கள், ஆங்காங்கு செய்து வைத்துள்ள கல் வெட்டுகளையும், சிற்பவேலைகளையும் காணுகையில் கேட்குதில்லை நெஞ்சம். அதே போன்று இன்றும் அழியா செல்வங்களாக விளங்கி வரும் அஜந்தாவின் சிற்ப வர்ண வேலைப்பாடுகளையும், சிற்பிகளின் மனோதர்மத்தையும், கைத்திரனையும் காணுகையிலும் எண்ணுகையிலும் மயிர் சிலிர்க்கிறது. அத்துடன் இத்தகைய கலைஞர்களும் அவர்கள் குடும்பமும் என்ன ஆயிற்று என சிந்தியா திருக்க முடியவில்லை.

கலைகளுள் சிறந்து விளங்கி வந்த நம் நாடு இன்று கவனிப்பாரற்று தாழ்வுற்று கிடப்பதின் காரணம்? எல்லாம் ஊக்க மற்றதும், உணர்வற்ற மக்கள் போக்கும், எனவே எண்ணத் தோன்றுகிறது. இதை உணர்ந்து தானோ என்னவோ நம் அமரகவி பாரதியாரும், "சென்றிடுவீர் எட்டு திக்கும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் கலைச் செல்வங்களை" என்று கர்ஜித்திருக்கிறார்.

அமரத்வமான பாடல்களை உணர்ச்சி மிக எழுதி அமரவாழ்வடைந்த நம் பாரதியாரின் கனவு நினைவுற்று வரும் இக்காலில், கலைஞர்களும் அவரது உணர்ச்சிப் பெருக்கை தணிக்குமளவில் கலைத் தொண்டாற்ற முன் வரல் வேண்டும். இல்லையேல் நாம் நமது அசிரத்தை காரணமாக நமது நாட்டுக் கலைச் செல்வங்களுக்கும், நம் கவி பாரதியாருக்கும் இழைக்கும் பெருந் தீங்கு எனவே கூறல் வேண்டும்,

இன்று நடை முறையில் மக்கள் அறிவுக் குற்ற கற்பனைக்காவியங்களை தீட்டி அச்சிலிட்டு புத்தக ரூபமாக அனேகப் பெரியார்களும், அறிஞர்களும் எழுதி வெளியிடுகின்றனர். ஆனால் அதனை ஓய்வுடன் படித்து அதில் உள்ள கருத்தை உணரும் அளவுக்கு நேரமில்லாது போகிறது. அத்துடன் ஒரு சிலருக்கு புத்தகம் வாங்கி படிக்க வேண்டும் என எண்ணமிருக்கலாம். ஆனால் வாங்கிப் படிக்க போதிய பணமிராது. இதுவே போன்று இன்று நடை முறையில் அனேக ஆர்வமுள்ளவர்கள் நிலை இருந்து வருகின்றன. ஆகவே இவை யாவற்றிற்கும் மேலானது, அறிவுக்


# உங்களுக்கு எது தேவை!

விளம்பரத்துக் கேற்ற அழகிய போர்டுகள்!

விதவிதமான டிசைனகளில் ஓவியங்கள்!

கண்ணைக் கவரும் சைன் போர்டுகள்!

அழகிய கலர்களில் பான்னர்ஸ்,கட் அவுட்ஸ்-லாயட்ஸ்

மற்றும்

சினிமா ஸ்லைட், சினிமா பிலிம் கலரிங், எல்லாவற்றிற்கும்

புகழ் பெற்ற இடம்:

ஒரு முறை எங்களிடம் உங்கள் ஆர்டரைக் கொடுத்துப் பாருங்கள்

**சாம்ராஜ் ஆர்ட்ஸ்**

(ஓவியக் கலைக் கோவில்)

354, தங்கசாலைத் தெரு

ஜி. டி. சென்னை.

குயர்வான, மக்களின் போதனைக் குரித்தான எழுத்தோவியங்களைப் பண்டிதர்முதல் பாமரர் வரை உயர்வு தாழ்வின்றி ஏக காலத்தில் ரசித்து உண்மையை உணரச்செய்ய உதவுவது நம் சலனப் படக் காக்ஷி. இன்னமும் நம்மவர்கள் அதனின் உண்மைப்பயனை உணர்ந்து கையாளாது வெறும் வியாபாரப் பொருளாகவே கையாண்டு வருவதால் அது தினம் தினம் முன்னேறி வர இயலாது இருந்து வருகிறது.

இதற்கு நம் பட முதலாளிகள் தான் ஓர் முடிவைத் தேட வேண்டும். அத்துடன் கலை ஆர்வமிக்க முதலாளிகள் இத்துறையில் முன் வந்தாலேயே சலனப் பட உலகமும் நிலைத்து இருக்க ஹேதுவாகும். இல்லையேல் அமித லாபம் என்னும் சூறுவளிக்கும், கலைக்கொலை என்னும் பூகம்பத்திற்கும் இலக்காக வேண்டுவதுதான் மிச்சம்

அத்துடன் நாட்டு நலனுக்காகவும், மக்களின் அறிவு பெருக்குக்காகவும் பல அன்றாட வாழ்க்கையில் காணும் அதிசயங்களையும், நடைமுறையில் காணும் பல இழிகேடுகளையும், வாழ்க்கையில் விளையும் சில அசம்பாவிதங்களையும் உணர்த்தும் கலா சிருஷ்டிகளைத் திரைக்கெனத் தீட்டி கலைஉறவுக்கு கொண்டு வர முன் வரல் வேண்டும். அதை விடுத்து திரும்பத் திரும்பபகாசூரன், பஸ்மாசூரன், சூரபத்மன், கடோத்கஜன் போன்றோரின் வதமும்: கிருஷ்ணனின் மாயலீலைகளையும் அத்துடன் அவர் அர்ஜுனனுக்கு அல்லி, பவளக்கொடி, சுபத்ரா, பங்கஜவல்லிபோன்ற ஆண்வாடையே விரும்பா பெண்மணிகளை கூட்டி விட்டு மகிழ்ந்தது போன்ற அசம்பாவிதக் கதைகளையே பட ரூபமாக்கி நம் அறிவையும், முன்னேற்றப் போக்கையும் சீர்குலைக்க முற்படும் எட்டுப் பிரதிகளை உருவாக்காது மக்களின் முன்னேற்றத்திக்கும் சீர்திருத்தத்திற்கும் ஏற்றதான உணர்ச்சி மிக்க கற்பனைக் காவியங்களைத்தீட்டச் செய்து உருவாக்க முன் வர முனைதல் வேண்டும். அன்று தான் நம் படக்கலையும் முன்னேறும். நம் மக்கள் பாங்கும் உயரும். இதனால் நம் பட முதலாளிகளும் அழியாப் பேரும் புகழும் பெறுவர். இதனை உணர்ந்து உருவாக்க முதலாளிகள் முன் வரும் நாள் என்நாளோ!

இவை யாவற்றிற்கும் நம் பட முதலாளிகளின் அறிவுக் கண்களைத் திறந்து விட கைலையங்கிரிநாதன் தான் முன் வரல் வேண்டும். கலை அன்பர்களாகிய நம் உள்ளத்தில் எழும் துடி துடிப்பைத் தணிக்கவும், பட முதலாளிகளின் ஞான சூன்யம் அழியவும் என்றைக்கு சிவகிருபை வருமோ!


தென்னிந்தியாவின் சிறந்த கலைக்கோவிலாகப் புதிதாய்
கட்டப்பட்டிருக்கும்

**கோவை ஷண்முகா தியேட்டரில்**

**11-11-47 தீபாவளி முதல் தினசரி**

---

டி. கே. எஸ். சகோதரர்களின் நாடக விழா

# ஔவையார்

(பி. எத்திராஜு எழுதியது)

---

தமிழ் நாட்டின் அறிஞர்களும், பத்திரிகைகளும்
"அற்புதம்! ஆச்சரியம்!!" எனப்
புகழ்ந்து போற்றிய தமிழ்க் கிழவி சரிதை

---

புதன், ஞாயிறு மாலை 6-30....மற்ற நாட்களில் இரவு 9-30மணிக்கு
திங்கள் விடுமுறை நாள்

**டி. கே. எஸ். சகோதரர்கள், உரிமையாளர்கள்**

# உங்கள் எதிர்கால மாத பலன்கள்

## 16-11-47 முதல்—15-12-47 வரை

[ஜோசியர் K. S. கன்னையராஜு]

இராசி:—நக்ஷத்திரம் இருப்பவர்களும், இல்லாதவர்களும், கூட பெயரின் முதல் எழுத்தைக் கொண்டே யாவரும் சுலபமாக அறியும் வண்ணம் எழுதப்படுகின்றது.

மேஷராசி:—அசுவனி:-சு, செ, சொ, ல
பரணி:-லி, லு, லெ, லோ,

கார்த்திகை:—அ. இந்த 9 எழுத்துகளின் பலன் பின்னகளின் நிமித்தமாக கோபமும் துக்கமும் உண்டாகும். அக்கினி பயமும் மனை வழியில் திருடு போகும். நேர்த்திர பாதை, தன நஷ்டம், ஆயுதபயம். பந்துக்கள் வகையில் விசனமும், துஷ்ட புத்தியும் உண்டாகும். அதைத் தவிர்த்தல் வேண்டும்.

ரிஷபராசி:—கார்த்திகை இ, உ, எ
ரோகணி:-ஒ, வ, வி, வு
மிருகசிரம் வெ, வோ

இந்த 9 எழுத்துகளின் பலன், பாதத்தில் சிறு பாதையும் சரீராரோக்கியக் குறைவு, பூர்வ தனகுறைவு, (தனச்சிலவு) சகோதர நட்புண்டாகும். பயணத்தின் இச்சையும அலைச்சலும் உண்டாகும். மனைவியின் சுகக்குறைவும்வேசியுள்ளவர்க்கும் மனோதுக்கமும் உண்டாகும்.

மிதுனராசி:—மிருகசிரம் க, கி
திருவாதிரை கு, க, ங, ச
புனர் பூசம் கே, கோ, ஹ

இந்த 9 எழுத்துகளின் பலன்: யாதொரு காரியத்தையும் சாதிக்க முடியாமையும், பல வகையிலும் விசாரமும், துக்கமும் ஏற்படும். 2-12-47க்கு மேல் தோஷத்தின் காரணமாக கவலையும் சிக்கும், மயக்கம் போல, ராஜ பயமும் திருட்டு பயமும், ரணம், தேக மெலிவு உண்டாகும். நவ நாயக்கர்களை பூஜித்தல் வேண்டும்.

கடகராசி:—புனர்பூசம் ஹீ
பூசம் ஹு, ஹே, ஹொ, டோ
ஆயில்யம் டி, டே, டோ, டே

இந்த 9 எழுத்துகளின் பலன், எதிலும் சுகக்குறைவு, புதுதனவந்தர்கள், நேசமும் நேத்திர பாதை, பித்த சுரம், துர்வார்த்தைகள் பேசும் படியான சமயம் வாய்க்கும். அதை தவிர்த்தல் வேண்டும். சாதாரண விறயமும் சொற்பனு அவஸ்த்தையும் தலைப்பாக உபத்திரவம் முண்டாகும்

சிம்மராசி:—மகம் ம, மி, மு, மே
பூரம் மோ, ட, டி, டு
உத்திரம் டே

இந்த 9 எழுத்துகளின் பலன்: பலவகையிலும் துக்கமும் வேலை செய்யும். ஆயுதங்களால் காய முண்டாகும் பல வகையிலும் நஷ்ட முண்டாகும். வெகு ஜாக்கிரதை வேண்டும்.

கன்னிராசி:—உத்திரம் டோ, பா, பி
அஸ்தம் பூ, ஷ, ட, ணு
சித்திரை பே, பே


உங்கள் பற்களை
மின்னல் போல
ஒளி பெறச் செய்யும்

"மீனு"

பற்பொடி

உபயோகிக்கும்

அன்பர்கள் அனைவருக்கும்
எமது சுதந்திர தீபாவளி
வாழ்த்துகள்?

இந்த 9 எழுத்துகளின் பலன் சுபகாரியா திகளை சாதிக்க முடியாமையும், பல விதத்தி லும் சொற்ப நஷ்டமு முண்டாகும் 2-12-47 அதிக அலைச்சலும்நஷ்டமுமுண்டாகும். பித்த பாதை விஷயமும், ராஜபயமும் ஏற்படும். பந் துக்கள் வகையிலும் தொந்திரவுண்டாகும். உத்தியோக பங்கமும் ஏற்படும். ஆபத்தும் உண்டாகும். தெய்வத்தின் துதிமிக அவசியம்.

துலாஇராசி:—சித்திரை, ரா, ரி
சுவாதி ரூ, ரே, ரோ், தா
விசாகம் தெ, தோ, தே

இந்த 9 எழுத்துகளின் பலன்:-சுபகாரியங் களின் விருப்பும், வித்தை (தொழில்) இதற்கு சகலரின் அன்பும் ஆதரவும், ராஜாங்க அன் பும் அபிமானமும்உண்டாகும். முன்யோசனை வேண்டும், இது விஷயமாக பிறர் விரோத மூண்டாகும். உஷாரா யிருத்தல் தேண்டும்.

விருச்சிகராசி:—விசாகம் தோ
அனுஷம் ந, நி, நு, நூ
கேட்டை நோ, ய, யி, யு

இந்த 9 எழுத்துகளின் பலன்:-சற்று கோபமான குணம். பந்துக்கள் அரசாங்கத் தார் இவர்களிடம் சாந்தமான முறையிலே நடத்தல் வேண்டும். ஜலசம்பந்தமான வியாதி (மூத்திரம்) உஷ்ண பாதையும் ஏற்படும். ஜாக் கிரதை வேண்டும்.

தனுர்ராசி:—பூராடம் பூ, த, ட, ப,
மூலம் ஏ, யோ, பா, பி
உத்திராடம் பே

இந்த 9 எழுத்துகளின் பலன்:-ராஜ தூது (பிறர் நிமித்தமாக) அயலூர் செல்லும் யோக் கமும் அதனால் மத்திபமான ஆதாய பலன் களும் உண்டு. மனைவுள்ள வர்களுக்கு உடல் நிலை சரியில்லாமையும் பாதத்தில் பாதையும் ஏற்படும், கடவுள் அன்பு பாராட்டல் வேண்டும்.

மகராசி:— உத்திராடம் போ, ஜ, ஜி
திருவோனம் ஜீ, ஜே, ஜோ, கா
அவிட்டம் கா, கி

இந்த 9 எழுத்துக்களின் பலன்:-சாதாரண தேக பாதை உஷ்ண சம்பந்தம் ஸ்ரீகள் மனஸ் தாபம் சற்று விசனமும் உண்டாகும். சில சபயங்களில் பயமும் தோன்றும். சிறு நஷ்ட மும்உண்டாகும் உத்தியோக வெறுப்பு. செய் யுந்தொழில் வெறுப்புண்டாகும் முன்யோ சனை நல்லது.

கும்பராசி:— அவிட்டம் கு, கே
சதயம் கொ, ஸா, ஸி, ஸு
பூரட்டாதி ஸே, ஸோ, தா

இந்த 9 எழுத்துகளின் பலன்:-உஷ்ண சம்மந்தம மனைவி வகையில் சிறு கவலையு முண்டாகும். தனது உடலும் சரியா யிருக்காது யாவரும் விகல்பமானத் தன்மை காட்டுவாகள் ஜாக்கிரதை வேண்டும்.

மீனராசி:—பூரட்டாதி, தி
உத்திரட்டாதி து, ஸ்ரீ, ஸா, ய
ரேவதி தே, தோ, ச, சி

இந்த 9 எழுத்துக்களின் பலன்:-ராஜபயம் உடல் நிலை சரியில்லாமை! மனோவிகல்பம் தன் னையும் மீறி தூணடும் 22-1[illegible]-47க்கு மேல் பந்துக்கள் நட்புதேவை பக்தி அவசியம் வேண்டும். சாதாரண சுக முண்டாகும்.

---


## இம்பீரியல் டாய்லட் ஒர்க்ஸ்

சுதந்திர தீபாவளி நாளில்

ஓர் நற்செய்தி!

உயர்தரமான ஸ்னோ, டால்கம் பவுடர், ஹேர் ஆயில் முதலியவைகள் உயர்ந்த முறையில் தயார் செய்யும் விதத்தை தேவையானவர்களுக்கு கற்றுக் கொடுக கப்படும் இதற்கென்று மெஷின் எது வும் தேவையில்லை. சுலபமான வழி! ஆண், பெண் அனைவரும் கற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் கற்றுக் கொள்ள ரூ. 7. நேரில் கற்றுக்கொள்ள ரூ. 10. முன் பணம் மணி ஆர்டர் மூலம் அனுப்பவும்.

முழு விலாசத்துடன் எழுதுக:

**'K. N. ராமன்ஸ்'**

இம்பீரியல் டாய்லெட் ஒர்க்ஸ்,

மாரியம்மன் கோவில் தெரு,

செவ்வாய்பேட்டை :: சேலம்

# ஐயா, பட முதலாளிகளே!

[மதிமுகன்]

"ஒரு நாடு உயர்ந்த நிலைக்கு வர உதவும் சாதனங்களில் சினிமாக் கலையும் ஒன்று" என்கிறார் மேனாட்டு அறிஞர் ஒருவர். அவர் கூறுவது முற்றிலும் உண்மை. ஒரு தேசம் கல்வித்துறையில் பிற் போக்கான நிலைமையில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த நாட்டில் 7 சதவிகிதம் தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் இருக்கின்றனர். இந்தியாவைப் போல் அப்படிப் பட்ட தேசத்தில் எவ்விதம் சினிமாக் கலையின் மூலம் தேசத்தில் கல்வி அபிவிருத்தி செய்யலாம் என்பதை அந்நாட்டு அறிஞர்கள் தீர்மானிக்கலாம். பட முதலாளிகள், டைரக்டர்கள் பொது ஜன ரசிகர்களில் சிறந்தவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஓர் மகாநாடு கூட்ட வேண்டும். அந்த மகா நாட்டில் தீர்மானங்கள் பல நிறை வேற்ற வேண்டும். அவ்விதம் செய்தால் அந்த நாட்டிற்குச் சிறந்த தொண்டு செய்தவர்களாவர்கள் சினிமா முதலாளிகள்.

எல்லா நாடுகளும் எல்லாத் துறையிலும் சிறந்து விளங்குவதென்பது அவ்வளவு எளிதான காரிய மல்ல ஒரு நாடு கல்வித்துறையில் பிற் போக்கான நிலைமையில் இருக்கலாம். மற்றொரு நாடு தொழில் வள மில்லாத நாடாக இருக்கலாம் அங்கு தொழிலை எப்படி ஆரம்பிக்கலாம், தொழிற்சாலைகளில் அபாய கரமான இடங்களில் வேலை செய்வது எப்படி தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இருக்க வேண்டிய உறவு முறைகள் போன்ற வைகளை தொழிலாளர்கள் உணரும் முறையில் எடுத்துக் காட்ட சினிமா போன்ற சிறந்த ஸ்தாபானங்கள் உபயோகப்படும். உபயோகிக்க வேண்டிய பொறுப்பு முதலாளிகளைச் சார்ந்தது.

ஏழை முதல் பணக்காரர் வரை, படித்தவர் முதல் பாமரர்வரை, வயோதிகரர் முதல் வாலிபர்வரை பார்த்து பயனடையும் சாதனங்களில் முக்கியமானது இந்தச் சினிமா. அப்படிப் பட்ட சினிமாவினால் எத்தனையோ நற் புதிர்களைப் புகட்டலாம் ஏழைமக்களுக்கு.

அக்டோபர் முதல் தேதியிலிருந்து சென்னை சர்க்காரே மேலும் எட்டு ஜில்லாக்

---


## ஸ்ரீ வசிட்டர் நாடி ஜோதிட நிலையம்

ஜெனன ஜாதக மின்றி உங்கள் தெசா புக்தி, அந்தர விவரங்களை ஆரூட பாவத்திலும், முக்காலப் பலா பலன்கள், முக்யாற்புத நிகழ்ச்சிகளனைத்தும் புராதனர் ஏட்டோலைப் பிரதிகளாகிய பன்னிரண்டு பாவங்களி லிருந்தும் நிகரமாய் எடுத்து வாசிக்கப்படும்.

ஆலோசனை:—

உதய மணி 9 முதல் அஸ்த மணி 7 வரை.

உங்களன்பன்,

இடம்:—

**S. P. கல்யாணம்**

15, ஆனைக்கார கோனான் வீதி,

ஏழுகிணறு சமீபம்,

மதராஸ்.

களில் மதுவிலக்கு திட்டம் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் வெற்றி பெற மக்களும் ஒத்துழைக்க வேண்டுமென்கிறார்கள் மந்திரிமார்கள். இல்லை மன்றாடுகிறார்கள். அவர்கள் குடும்பம் ஆனந்தமாக இருப்பதற்காக அல்ல பாமர மக்கள் பாழ் நரகத்தில் விழாதிருப்பதற்காகத்தான். தொழிலாளர்கள் மது அரக்கனிடம் பணத்தைக் கொடுத்து மனைவி மக்களைத் திண்டாடித் தெருவில் கதற விடும் காட்சிகளை அகற்ற பாடு படுகிறார்கள் நம் மந்திரிகள்.

திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்களிலிருந்து மது அருந்த ஏழை மக்கள் புதுக் கோட்டை சமஸ்தானத்திற்கு வருகிறார்கள் புதுக்கோட்டையிலும் மதுவிலக்குத் திட்டம் அமுலுக்கு கொண்டு வந்தால் நன்றாக இருந்திருக்கும். (புதுக்கோட்டை தான் தர்ம சமஸ்தானமாயிற்றே!) புதுக்கோட்டை மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து பாமர மக்களைப் படுகுழியிலிருந்து காப்பாற்றும் என நம்புகிறோம். சர்க்கார் இந்த மாதிரி திட்டங்கள் கொண்டு வந்தால், சினிமா முதலாளிகள் மதுவினால் வரும் கேடுகளை மக்கள் உணரும்படி செய்ய வேண்டும்.

தமிழ் நாட்டை பொறுத்த வரை பட முதலாளிகள் பண வருவாயைத்தான் முக்கியமாகக் கருதுகிறார்கள். அத்துடன் கலையையும் சேர்த்துக்கலைக் கண்ணுடன் நோக்கினால் நன்றாயிருக்கும் உதாரணமாக ஓர் நடிகருக்கு பேரும் புகழும் ஓர் படத்தில் ஏறி விட்டால் அந்த நடிகருக்கு அதிகப் பணம் கொடுத்து தன்னுடைய படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தம் செய்து விடுவார்கள். அவர்கள் எடுக்க நிச்சயித்திருக்கும் படத்திற் கேற்ற கதாநாயகன் தானா என்பதைப் படமுதலாளிகள் சிந்திப்பதில்லை. ஒருவர் புராணப் படத்தில் நன்கு நடித்திருக்கலாம்.

இவரை ஒப்பந்தம் செய்திருக்கும் முதலாளி எடுக்க நினைக்கும் படம் ஹாஸ்யப்படமாக இருக்கும். அந்தப் படத்தில் சோகக் கட்டம் ஒன்றை உண்டாக்கிக் கொண்டு அந்த நடிகருக்குப் பெயரும் புகழும் உண்டாக்க முற்படலாம். சோகத்தை நடித்துக் காட்டுகிறார் முக பாவத்திலே என்பதற்காக படத்தை பாழ் படுத்தலாமா? அதைத்தான் செய்கிறார்கள் நம் பட முதலாளிகள். அதிலிருந்து அவர்கள் கலைக்காக எவ்வளது தூரம்

# தயாராகிறது!

தமிழ் சினிமா உலக நடிக, நடிகையர், டைரெக்டர்கள், டெக்னீஷியன்கள், சாகித்ய, வசன கர்த்தாக்கள், முதலாளிகள் ஆகிய ஒவ்வொருவரின் ரஸமான வாழ்க்கை குறிப்புகள் தமிழ்சினிமா டைரெக்டரியாக தொகுக்கப் பட்டு வருகிறது.

சினிமாக்கலை பற்றிய கதை, கலையின் மேன்மை, இன்னும் இவை பற்றி, அறிஞர்களின் அபிப்ராயங்களும், கலை முன்னேற்றத்துக்கான பல அரிய திட்டங்களுடன் டைரெக்டரியை தமிழ் மக்களுக்கு விரைவில் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்து வருகிறோம்.

இதுவரை வெளி வராத பல அபூர்வ செய்திகள், பலவர்ண படங்கள் டைரெக்டரியை அலங்கரிக்கின்றன.

## எதிர்பாருங்கள்!

விபரங்களுக்கு:—

— ஆசிரியர் —

**கலாமண்டலம்,**

5, கோபால்தாஸ் ரோட்,

மௌன்ட் ரோட், சென்னை.

பாடுபடுகிறார்கள் என்பதைப் பொது மக்கள் புரிந்து கொள்ளலாம்!

நம்ப முதலாளிகள் எடுத்த படங்களையே திரும்ப திரும்ப எடுக்கிறார்கள். ஹரிச்சந்திரா — ஜெமினி ஹரிச்சந்திரா, பக்த மீரா மீரா, சுபத்ரா, அர்ஜுனா இந்த மாதிரிப் புராணப் படங்களை எடுப்பதால் பயனில்லை மக்கள் வாழ்க்கைக்கு மறுமலர்ச்சியை உண்டாக்க போவதில்லை. இவ்வுலக வாழ்க்கைக்கு உகந்தவை அல்ல. புராணப்படங்கள் பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை என்ற பொன்மொழியை மக்கள் மறந்து விட வில்லை என்பதை பட முதலாளிகள் மனதில் வைத்து கொள்ள வேண்டும்.

சமூகப் படங்கள் எடுக்க வேண்டும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை எவ்விதம்உயர்த்துவது என்ற கருத்து அதில் தொனிக்க வேண்டும். அன்றாடம் ஓழைத்து அல்லலுறும் தொழிலாளர்களின் வாழ்க்கை அவர்களுக்கு கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டே எவ்விதம் இன்பகரமான வாழ்க்கையாக ஆகிக் கொள்ள முடியும் என்பதைப் படத்தின் மூலம் பாமர மக்களுக்கு அறிவிக்க வேண்டும். எளிய வாழ்க்கை இன்பகரமான வாழ்க்கையாக நடத்த எவ்விதம் திட்டம் வகுத்து நிறைவேற்றலாம் என்ற உண்மையை ஏழைத் தொழிலாளி அறியும் வண்ணம் செய்ய வேண்டும்.

சமூகச் சேவையைப் பெரிதாக நினைத்து கலையை கண்யமான முறையில் அபிவிருத்தி செய்ய நம் படமுதலாளிகள் உழைப்பார்களேயானால், தமிழ்ப்படம் வட நாட்டுடன்கூட அல்ல, உலகஅரங்கிலேயே உயர்ந்த ஸ்தானம் அடைய முடியும்.

[ஐயா, பட முதலாளிகளே! போனதுபோகட்டும். வருங் காலத்திலாவது தமிழ்ப் படம் தனி ஸ்தானம் வகிக்கப் பாடுபடுங்கள்.]


இழந்த சக்தியை மீண்டும் பெற

## தாது புஷ்டி ஸ்தம்பண சூரணம்

உஷ்ண சம்பந்த மான வியாதிகளினால் சுக்கிலம் நீற்றுப்போனதை பிசின்போல்கெட்டிப் படுத்தி சர்வ நாடி நரம்புகளுக்கு வலுவை கொடுத்து இல்லற இன்ப சுகபோகங்களுக்கு நீடித்த நேரம் வரை அனுபவிக்கக் கூடிய அருமையான சூரணம் தயாரிக்கப் பெற்றது.

48 நாள் சாப்பிடக் கூடிய டின் 1க்கு ரூ. 5.

ஆண்கள் லேபண தைலம் லிங்க நரம்புகள் தளர்ந்து சோர்ந்து துவண்டு சிறுத்து போனதை கெட்டி படுத்தி கோருசத்தை பெருக்க செய்து நீண்டும் போக சக்தியை கொடுக்கும் அருமையான லேபண தைலம்.

புட்டி 1-க்கு ரூ. 3.

பேண்களுக்கு மார்புஸ்தன தளர்ச்சி சுருங்கி இவைகளை நீங்கி இறுகல்பிருத்தம் கொடுத்து வலுவாக மாதளங் கனிபோல் நிமரும்.

மேல் பூசும் தைலம் புட்டி 1-க்கு ரூ. 5

சித்தவைத்திய பண்டிட்

## S. V. R. கண்டர் R. I. M. P.

இராஜாளி எண்ணெ டிப்போ

அரிசிபாளையம், சேலம். S. I.

ஏஜண்டுகள் தேவை.



**Edited & Published by V. PICHIAN, No. 5, Gopaldos Road, Mount Road, Madras. and Printed by K. Duraisawmy Reddiar, at the Adal Padal Press, 82, Wallajah Road, Mount Road, Madras.**